த்தியார்ச்சுன மான்மியம்

ஸ்ரீ ஏகநாயகரூசல்

ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு



ஆசிரியர் :

மஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

ர். உ. வே. சாமிநாதையரவர்கள்.

பொருளடக்கம்

பக்கம்.

1. தியாகராஜ செட்டியாரவர்கள் இயற்றிய சிறப்புப் பாயிரம் ... ii
2. முகவுரை ... v
3. தேவாரப்பதிகங்கள் ... க
4. திருவாசகம் ... உஉ
5. கருவூர்த்தேவர் திருவிசைப்பா ... உரு
6. பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த மும்மணிக்கோவை ... உசு
7. **மத்தியார்ச்சுன மான்மியம்** ... 1–41

[ஸ்தலமகிமை–மருதவிருக்ஷத்தின் வரலாறும் சிவ பெருமான் காட்சி கொடுத்தருளிய முறையும்–உரோமச முனிவரும் வீரசோழனும் வழிபட்டது–மார்க்கண்டேய முனிவர் பேறுபெற்றது–சுகீர்த்தி மகப்பேறடைந்தது–வசிஷ்டர் முதலியோர்சித்தி பெற்றது–தீர்த்த மகிமை–வரகுண பாண்டியர் வழிபட்டது – ஹம்ஸத்துவசன் பேறு பெற்றது–வீரசேனன் பேறுபெற்றது–சித்திரகீர்த்தி பாண்டியன் மகப்பேறுற்றது–பிரதக்ஷிணமகிமை – பிரதக்ஷிணம் செய்து பேறு பெற்றோர் சிலர் சரித்திரம்–நாரத முனிவர் வழிபட்டது]

8. வஸந்தோத்ஸவத் திருக்கல்யாண வரலாறு ... 42
9. ஸ்ரீ ஏகநாயக ரூசல் ... 45
10. ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு ... 48

உ

கணபதி துணை

ஸ்ரீமத்தியார்ச்சுன மான்மியம்

ஸ்ரீ ஏகநாயகருசல்

ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு

549

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

இயற்றியவை.

இவை

திருக்கைலாய பரம்பரைத்

திருவாவடுதுறை யாதீனத்து

20-ஆம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்

பொருளுதவியைக் கொண்டு

ஷை ஐயரவர்கள் குமாரர்

எஸ். கலியாணசுந்தர ஐயரால்

பதிப்பிக்கப்பெற்றன.

இரண்டாம் பதிப்பு

கபீர் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி, சென்னை.

சித்திரபானு ஹு தை மீ

Copyright Registered] 1943 [விலை அணா 8

உ

திரிசிரபுரம் வித்வான்

சி. தியாகராஜ செட்டியாரவர்கள் இயற்றிய

சிறப்புப்பாயிரம்

மன்னுமருட் பரமனிடை மருதமான் மியந்தமிழின்
வயங்கி யோங்க
நன்னடையில் வரைந்தனையன் றுலாட்டுத் திருவூச
னயக்கச் செய்தான்
சொன்னடையும் பொருணடையு நன்குணர்ந்த
பெரும்புலவன் றூயோர் வேண்டும்
எந்நடையு மியல்பினுணர் சாமிநா தப்பெயர்கொ
ளியல்வல் லோனே.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்தில் இருபதாம் பட்டத்தில்
எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்

உ

ஸ்ரீ மஹாலிங்கம் துணை

முகவுரை

சோழவள நாட்டின்கண் காவிரி நதியின் தென்கரையில் அமைந்துள்ள பாடல் பெற்ற சிவக்ஷேத்திரங்கள் பலவற்றுள் தலை சிறந்தது மத்தியார்ச்சுனம் என்பது அறிஞர் அறிந்ததே. இது தென்மொழியில் திருவிடைமருதூர் என்னும் பெயரால் வழங்கும். இந்த ஸ்தலத்தின் ஒப்புயர்வற்ற அருமை பெருமைகளை யாவரும் உணர்ந்து பயன்பெறும் வண்ணம் திருவாவடுதுறை யாதீனத்தில் பெரிய காறுபாருக இருந்தவரும் மத்தியார்ச்சுன ஆலயத்தின் விசாரணையை நடத்திவந்தவருமான **ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமிகள்** விரும்பியபடி என் தந்தையாராகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் ஸ்தலத்தின் புராணங்களைத் தழுவி வசன நடையில் சுருக்கமாக **மத்தியார்ச்சுன மான்மியம்** என்னும் நூலை எழுதி **ஏகநாயக ரூசலையும் ஏகநாயகர் தாலாட்டையும்** இயற்றி முதன் முறை பார்த்திப வருடம் வைகாசி (1885-ஜூன்) மாதத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தின் உதவியால் அச்சிட்டு வெளியிட்டார்கள். திருவிடை மருதூர்த்தலத்தில் மிக்க பக்தி பூண்டுள்ள அவர்கள் முதன் முறையாக எழுதிய வசன நூல் இதுவே.

இப்பொழுது திருவாவடுதுறை யாதீனத்தில் 20-ஆம் பட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்** பட்டத்திற்கு வந்தவுடன் இந்தத் தலமான்மியத்தை மறுமுறை வெளியிடுதல் நலமாகுமென்று அவர்களிடம் சொன்னதுண்டு. பலவிதமான வேலைகளால் அவர்களால் அங்ஙனம் செய்யமுடியாமற் போயிற்று. இப்புத்தகத்தின் பிரதிகள் இக் காலத்தில் எங்கும் கிடைக்காமையால் இரண்டா முறையாக இப்பொழுது வெளியிடத்துணிந்து ஆதீனகர்த்தரவர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் அங்ஙனமே செய்யவேண்டுமென்று மனமுவந்து உத்தரவு செய்து அச்சிடுதற்கு உரிய பொரு

ளேயும் வழங்கினார்கள். இப்போது மகாலிங்கமூர்த்தியின் ஆலயத்தில் பலவகையான புதிய திருப்பணிகளை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்வித்து யாவருக்கும் பெருமகிழ்ச்சியை அளித்துவிளங்கும் **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகரவர்கள்** இந் நூலை வெளியிடச் செய்வித்தது மிகவும் பாராட்டற் குரியது. அவர்கள் செய்த பேருதவியை நான் என்றும் மறவேன்.

தமிழில் இத்தலசம்பந்தமாகப் **பட்டினத்துப் பிள்ளையார்** இயற்றிய மும்மணிக்கோவை ஒன்றும், **ஞானக் கூத்தர்** என்னும் பெரியார் இயற்றிய புராணம் ஒன்றும், கொட்டையூர் **ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகரவர்கள்** இயற்றிய புராணமொன்றும், மகாவித்துவான் **ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்** இயற்றிய உலா ஒன்றும் திரிபந்தாதி ஒன்றும் ஸ்ரீ மருதவாணர் தோத்திரப்பதிகம் ஒன்றும், **அனந்த பாரதிகள்** இயற்றிய நொண்டி நாடகம் ஒன்றும் உள்ளன.

பாராயணம் செய்பவர்கட்கு உபயோகமாக இருக்குமென்று கருதி இத்தல சம்பந்தமான **மூவர்தேவாரப் பதிகங்களையும்** கருவூர்த்தேவரது **திருவிசைப் பாவையும்** பிற திருமுறைப் பகுதிகளையும் முதலில் சேர்த்திருக்கிறேன்.

மூர்த்தி தலம் தீர்த்தம் இவற்றின் அருமை பெருமைகளும், ஆதிகாலந்தொட்டு இத்தலத்துக்கு வந்து வழிபட்டுப் பேறு பெற்றவர்களுடைய சுருக்கமான வரலாறுகளும் இந்நூலால் விளங்கும்.

ஏறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன் வெளியான இந்நூலை மறுமுறை பதிப்பிக்கும்படியான பணி எனக்குக் கிடைத்ததை நான் ஒரு பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

‘தியாகராஜ விலாசம்’
திருவேட்டீசுவரன்பேட்டை
4—2—1943.

இங்ஙனம்
S. கலியாணசுந்தர ஐயர்

தேவாரம்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண்—தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஓடேகல னுண்பது மூரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லா னிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானு மகிழ்ந்
தீடாவுறை கின்ற விடைமரு தீதோ. (க)

தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேற்
குடங்கொண்டடி யார்குளிர் நீர்சுமந் தாட்டப்
படங்கொண்டதோர் பாம்பரை யார்த்த பரமன்
இடங்கொண்டிருந் தான்ற னிடைமரு தீதோ. (உ)

வெண்கோவணங் கொண்டொரு வெண்டலை யேந்தி
அங்கோல்வளை யாளையோர் பாக மமர்ந்து
பொங்காவரு காவிரிக் கோலக் கரைமேல்
எங்கோனுறை கின்ற விடைமரு தீதோ. (ங)

அந்தம்மறி யாத வருங்கல முந்திக்
கந்தங்கமழ் காவிரிக் கோலக் கரைமேல்
வெந்தபொடிப் பூசிய வேத முதல்வன்
எந்தையுறை கின்ற விடைமரு தீதோ. (ச)

வாசங்கமழ் மாமலர்ச் சோலையில் வண்டே
தேசம்புகுந் தீண்டியொர் செம்மை யுடைத்தாய்ப்
பூசம்புகுந் தாடிப் பொலிந்தழ காய
ஈசனுறை கின்ற விடைமரு தீதோ. (ரு)

வன்புற்றிள நாக மசைத்தழ காக
என்பிற்பல மாலையும் பூண்டெரு தேறி
அன்பிற்பிரி யாதவ ளோடு முடனாய்
இன்புற்றிருந் தான்ற னிடைமரு தீதோ. (சா)

தேக்குந்திமி லும்பல வுஞ்சுமந் துந்திப்
போக்கிப்புறம் பூசல டிப்ப வருமால்
ஆர்க்குந்திரைக் காவிரிக் கோலக் கரைமேல்
ஏற்கவிருந் தான்ற னிடைமரு தீதோ. (எ)

பூவார்குழ லாரகில் கொண்டு புகைப்ப
ஓவாதடி யாரடி யுள்குளிர்ந் தேத்த
ஆவாவரக் கன்றனை யாற்ற லழித்த
ஏவார்சிலை யான்ற னிடைமரு தீதோ. (அ)

முற்றுமதொர் பான்மதி சூடு முதல்வன்
நற்றாமரை யானொடு மாலயந் தேத்தப்
பொற்றோளியுந் தானும் பொலிந்தழ காக
எற்றேயுறை கின்ற விடைமரு தீதோ. (௯)

சிறுதேரருஞ் சிலசம ணும்புறங் கூற
நெறியேபல பத்தர்கள் கைதொழு தேத்த
வெறியாவரு காவிரிக் கோலக் கரைமேல்
எறியார்மழு வாள னிடைமரு தீதோ. (௧௦)

கண்ணார்கமழ் காழியுண் ஞானசம் பந்தன்
எண்ணார்புக ழெந்தை யிடைமரு தின்மேற்
பண்ணோடிசை பாடிய பத்தும்வல் லார்கள்
விண்ணோருல கத்தினில் வீற்றிருப் பாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

திருவிருக்குக்குறள்

பண்—குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

தோடோர் காதினன், பாடு மறையினன்
காடு பேணிநின், றாடு மருதனே. (௧)

கருதார் புரமெய்வர், எருதே யினிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. (௨)

எண்ணு மடியார்கள், அண்ணன் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. (௩)

விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியா ருலகிலே. (௪)

பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், புந்தி நல்லோரே. (௫)

கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. (௬)

பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையா னினைபவர், குறையா ரின்பமே. (௭)

எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. (௮)

இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. (௯)

நின்றுண் சமண்டேரர், என்று மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. (௧௦)

கருது சம்பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவியொ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டாலிழற்கீழ்
இருந்தவன் வளநக ரிடைமருதே. (௧)

தோற்றவன் கேடவன் றுணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த
நீற்றவ னிறைபுன னீள்சடைமேல்
ஏற்றவன் வளநக ரிடைமருதே. (௨)

படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவி லேற்றினன் ஞாலமெல்லாம்
முடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை யெம்மிறையே. (௩)

பணைமுலை யுமையொரு பங்கனென்னார்
துணைமதின் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநக ரிடைமருதே. (௪)

பொழிலவன் புயலவன் புயலியக்குந்
தொழிலவன் றுயரவன் றுயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநக ரிடைமருதே. (௫)

நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகட னஞ்சையுண்ட
இறையவன் வளநக ரிடைமருதே. (௬)

நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கண் முறைவணங்க
இனிதுறை வளநக ரிடைமருதே. (௭)

தருக்கின வரக்கன தாளுந்தோளும்
நெரித்தவ னெடுங்கைமா மதகரியன்
றுரித்தவ னொன்னலர் புரங்கண்மூன்றும்
எரித்தவன் வளநக ரிடைமருதே. (௮)

பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியர வணைமறி கடற்றுயின்ற
கரியவ னலரவன் காண்பரிய
எரியவன் வளநக ரிடைமருதே. (௯)

சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியி லுரையவை பொருள்கொளாதே
அந்தண ரோத்தினொ டரவமோவா
எந்தைதன் வளநக ரிடைமருதே. (கo)

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ டோங்குவரே. (கக)

திருச்சிற்றம்பலம்

திருவிராகம்

பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுர மெரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன்
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம் மிடர்கெட லெளிதே. (க)

மழைநுழை மதியமொ டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி யழகொடு மிளிர்வதோர்
இழைநுழை புரியண லிடமிடை மருதே. (உ)

அருமைய னெளிமைய னழல்விட மிடறினன்
கருமையி னொளிபெறு கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன் பிணைபெணொ டொருமையன்
இருமையு முடையண லிடமிடை மருதே. (ங

பொரிபடு முதுகுற முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையு ணடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி யொளிபெற மிளிர்வதோர்
எரிவளர் சடையண லிடமிடை மருதே. (ச)

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநலம திலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கு மிடமிடை மருதே. (ரு)

கலையுடை விரிதுகில் கமழ்குழ லகில்புகை
மலையுடை மடமக டுணையிட முடையோன்
விலையுடை யணிகல னிலனென மழுவினோ
டிலையுடை படையவ னிடமிடை மருதே. (சா)

வளமென வளர்வன வரிமுரல் பறவைகள்
இளமண லணைகரை யிசைசெயு மிடைமரு
துளமென நினைபவ ரொலிகழ லிணையடி
குளமண லுறமூழ்கி வழிபடல் குணமே. (எ)

மறையவ னுலகவன் மதியவன் மதிபுல்கு
துறையவ னெனவல வடியவர் துயரிலர்
கறையவன் மிடறது கனல்செய்த கமழ்சடை
இறையவ னுறைதரு மிடமிடை மருதே. (அ)

மருதிடை நடவிய மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொ டிகலின ரினதெனக்
கருதிட லரியதொ ருருவொடு பெரியதோர்
எருதுடை யடிகட மிடமிடை மருதே. (கூ)

துவருறு விரிதுகி லுடையரு மமணரும்
அவருறு சிறுசொலை நயவன்மி னிடுமணல்
கவருறு புனலிடை மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெட லணுகுதல் குணமே. (கo)

தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழிலிடை மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே. (கக)

திருச்சிற்றம்பலம்

திருவிராகம்

பண்—வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலியுரி விரவிய வரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
வெரிதரு சடையின ரிடைமரு தடைவுனல்
புரிதரு மன்னவர் புகழ்மிக வுளதே. (க)

மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரு மிடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவில ருலகினிற்
பிறிதிரை பெறுமுடல் பெறுகுவ தரிதே. (உ)

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென விடுபலி யவரிடை மருதினை
வலமிட வுடனலி விலதுள வினையே. (ந)

விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவ ரிடைமரு தெனுநகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் முயர்வே. (ச)

உரையரு முருவின ருணர்வரு வகையினர்
அரைபொரு புலியத ளுடையின ரதன்மிசை
இரைமரு மரவின ரிடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. (ரு)

ஒழுகிய புனன்மதி யரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை யடிகள தறைகழல்
எழிலின ருறையிடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருற விலரே. (சா)

கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடு
நிலையினர் சலமக ளுலவிய சடையினர்
மலைமகண் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவ ரிடமிடை மருதே. (எ)

செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரனிறி யவரிடை மருதது
பரவுவ ரருவினை யொருவுதல் பெரிதே. (அ)

அரியொடு மலரவ னெனவிவ ரடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழ
எரிதரு முருவர்த மிடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. (கூ)

குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலே
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமன நினைவது மெழிலே. (கo)

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயிலவ லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. (கக)

திருச்சிற்றம்பலம்

பண்—காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பொங்குநூன் மார்பினீர் பூதப் படையினீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாமவேத மோதினீர்
எங்கு மெழிலார் மறையோர்கண் முறையா லேத்த விடைமருதில்
மங்குலேய் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே. (க)

நீரார்ந்த செஞ்சடையீர் நெற்றித் திருக்க ணிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழுவொன் றுடையீர் பூதம் பாடலீர்
ஏரார்ந்த மேகலையாள் பாகங் கொண்டீ ரிடைமருதிற்
சீரார்ந்த கோயிலே கோயி லாகச் சேர்ந்தீரே. (உ)

அழன்மல்கு மங்கையி லேந்திப் பூத மவைபாடச்
சுழன்மல்கு மாடலீர் சுடுகா டல்லாற் கருதாதீர்

ஏழின்மல்கு நான்மறையோர் முறையா லேத்த விடைமருதிற்
பொழின்மல்கு கோயிலே கோயி லாகப் பொலிந்தீரே. (௩)

பொல்லாப் படுதலையொன் றேந்திப் புறங்காட் டாடலீர்
வில்லாற் புரமூன்று மெரித்தீர் விடையார் கொடியினீர்
எல்லாக் கணங்களு முறையா லேத்த விடைமருதிற்
செல்வாய கோயிலே கோயி லாகச் சேர்ந்தீரே. (௪)

வருந்திய மாதவத்தோர் வானோ ரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூச மாடி யுலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர் சீரா லேத்த விடைமருதிற்
பொருந்திய கோயிலே கோயி லாகப் புக்கீரே. (௫)

சலமல்கு செஞ்சடையீர் சாந்த நீறு பூசினீர்
வலமல்கு வெண்மழுவொன் றேந்தி மயானத் தாடலீர்
இலமல்கு நான்மறையோ ரினிதா வேத்த விடைமருதிற்
புலமல்கு கோயிலே கோயி லாகப் பொலிந்தீரே. (௬)

புனமல்கு கொன்றையீர் புலியி னதளீர் பொலிவார்ந்த
சினமல்கு மால்விடையீர் செய்யீர் கரிய கண்டத்தீர்
இனமல்கு நான்மறையோ ரேத்துஞ் சீர்கொ ளிடைமருதிற்
கனமல்கு கோயிலே கோயி லாகக் கலந்தீரே. (௭)

சிலையுய்த்த வெங்கணையாற் புரமூன் றெரித்தீர் திறலரக்கன்
தலைபத்துந் திண்டோளு நெரித்தீர் தையல் பாகத்தீர்
இலைமொய்த்த தண்பொழிலும் வயலுஞ் சூழ்ந்த விடைமருதில்
நலமொய்த்த கோயிலே கோயி லாக நயந்தீரே. (௮)

மறைமல்கு நான்முகனு மாலு மறியா வண்ணத்தீர்
கறைமல்கு கண்டத்தீர் கபால மேந்து கையினீர்
அறைமல்கு வண்டினங்க ளாலுஞ் சோலை யிடைமருதில்
நிறைமல்கு கோயிலே கோயி லாக நிகழ்ந்தீரே. (௯)

சின்போர்வைச் சாக்கியரு மாசு சேருஞ் சமணரும்
துன்பாய கட்டுரைகள் சொல்லி யல்ல றாற்றவே
இன்பாய வந்தணர்க ளேத்து மேர்கொ ளிடைமருதில்
அன்பாய கோயிலே கோயி லாக வமர்ந்தீரே. (௧௦)

கல்லின் மணிமாடக் கழும லத்தார் காவலவன்
நல்ல வருமறையா னற்றமிழ் ஞான சம்பந்த
னெல்லி யிடைமருதி லேத்து பாட லிவைபத்தும்
சொல்லு வார்க்குங் கேட்பார்க்குந் துயர மில்லையே. (௧௧)

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே. (௧)

மறையி னுண்மலர் கொண்டடி வானவர்
முறையி னுன்முனி கள்வழி பாடுசெய்
இறைவ னெம்பெரு மானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமெ னுள்ளமே. (௨)

கொன்றை மாலையுங் கூவிள மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்
என்று மெந்தை பிரானிடை மருதினை
நன்று கைதொழு வார்வினை நாசமே. (௩)

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேற்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளு மிடைமரு தன்கழல்
செம்மை யேதொழு வார்வினை சிந்துமே. (௪)

வண்ட ணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனார்
எண்டி சைக்கு மிடைமரு தாவென
விண்டு போயறு மேலை வினைகளே. (௫)

ஏற தேறு மிடைமரு தீசனார்
கூறு வார்வினை தீர்க்குங் குழகனார்

ஆறு செஞ்சடை வைத்த வழகனுர்க்
கூறி யூறி யுருகுமெ னுள்ளமே. (சு)

விண்ணு ளாரும் விரும்பப் படுபவர்
மண்ணு ளாரு மதிக்கப் படுபவர்
எண்ணி ஞர்பொழில் சூழிடை மருதினை
நண்ணி ஞரைநண் ணுவினை நாசமே. (எ)

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தனுர்
கந்த மாலைகள் சூடுங் கருத்தனுர்
எந்தை யென்னிடை மருதினி லீசனைச்
சிந்தை யானினை வார்வினை தேயுமே. (அ)

வேத மோதும் விரிசடை யண்ணலார்
பூதம் பாடநின் ருடும் புனிதனுர்
ஏதந் தீர்க்கு மிடைமரு தாவென்று
பாத மேத்தப் பறையுநம் பாவமே. (கூ)

கனியி னுங்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே. (கo)

முற்றி லாமதி சூடு முதல்வனுர்
ஒற்றி னூர்மலை யாலரக் கன்முடி
எற்றி னுர்கொடி யாரிடை மருதினைப்
பற்றி னுரைப்பற் ருவினை பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் வைகு மயலெலாம்
இறைவ னெங்கள் பிரானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமெ னுள்ளமே. (க)

மனத்துண் மாயனை மாசறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளைவெள் ளைமதி சூடியை
தனக்குத் தாயையெம் மானிடை மருதினை
நினைத்திட் டூறி நிறைந்ததெ னுள்ளமே. (உ)

வண்ட ணைந்தன வன்னியு மத்தமும்
கொண்ட ணிந்த சடைமுடிக் கூத்தனை
எண்டி சைக்கு மிடைமரு தாவென
விண்டு போயறு மேலை வினைகளே. (௩)

துணையி லாமையிற் றூங்கிருட் பேய்களோ
டணைய லாவ தெமக்கரி தேயெனு
இணையி லாவிடை மாமரு தில்லெழு
பணையி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே. (௪)

மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமரு தாவென்றென் மொய்குழல்
பண்ணை யாயமுந் தானும் பயிலுமே. (௫)

மங்கை காணக்கொ டார்மண மாலையைக்
கங்கை காணக்கொ டார்முடிக் கண்ணியை
நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தா ரிதழியே. (௬,௭,௮,௯,௰)

திருச்சிற்றம்பலம்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

காடுடைச் சுடலை நீற்றர் கையில்வெண் டலையர் தையல்
பாடுடைப் பூதஞ் சூழப் பரமனூர் மருத வைப்பிற்
றோடுடைக் கைதையோடு சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
ஏடுடைக் கமல வேலி யிடைமரு திடங்கொண் டாரே. (௧)

முந்தையார் முந்தி யுள்ளார் மூவர்க்கு முதல்வ ரானார்
சந்தியார் சந்தியுள்ளார் தவநெறி தரித்து நின்றார்

சிந்தையார் சிந்தை யுள்ளார் சிவநெறி யனைத்து மானார்
எந்தையா ரெம்பிரானு ரிடைமருதிடங்கொண் டாரே.(உ)

காருடைக் கொன்றை மாலைக் கதிர்மதி யரவி னோடு
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதியாய
போருடை விடையொன் றேற வல்லவர் பொன்னித் தென்பால்
ஏருடைக்கமலமோங்கு மிடைமரு திடங்கொண்டாரே.(ந)

விண்ணினார் விண்ணின் மிக்கார் வேதங்க ளான்கு மங்கம்
பண்ணினார் பண்ணின் மிக்க பாடலார் பாவந் தீர்க்கும்
கண்ணினார் கண்ணின் மிக்க நுதலினார் காமற் காய்ந்த
எண்ணினா ரெண்ணின் மிக்க விடைமரு திடங்கொண்டாரே. (ச

வேதங்க ளான்குங் கொண்டு விண்ணவர் பரவி யேத்தப்
பூதங்கள் பாடி யாட லுடையவன் புநித னெந்தை
பாதங்கள் பரவி நின்ற பத்தர்க டங்கண் மேலை
ஏதங்க ளற நின்று ரிடைமரு திடங்கொண் டாரே. (ரு)

பொறியர வரையி லார்த்துப் பூதங்கள் பலவுஞ் சூழ
முறிதரு வன்னி கொன்றை முதிர்சடை மூழ்க வைத்து
மறிதரு கங்கை தங்க வைத்தவ ரெத்தி சையும்
எறிதரு புனல்கொள் வேலியிடைமரு திடங்கொண் டாரே. (சு)

படரொளி சடையி னுள்ளாற் பாய்புன லரவி னோடு
சுடரொளிமதியம் வைத்துத் தூவொளி தோன்று மெந்தை
அடரொளி விடையொன் றேற வல்லவ ரன்பர் தங்கள்
இடரவை கெடவு நின்று ரிடைமரு திடங்கொண்டாரே. (எ)

கமழ்தரு சடையி னுள்ளாற் கடும்புன லரவி னோடு
தவழ்தரு மதியம் வைத்துத் தன்னடி பலரு மேத்த
மழுவது வலங்கை யேந்தி மாதொரு பாக மாகி
எழிறரு பொழில்கள் சூழ்ந்த விடைமரு திடங்கொண்டாரே. (அ)

பொன்றிகழ் கொன்றை மாலை புதுப்புனல்வன்னி மத்த
மின்றிகழ் சடையில் வைத்து மேதகத் தோன்று கின்ற
அன்றவ ரளக்க லாகா வனலெரி யாகி நீண்டார்
இன்றுட னுலக மேத்த விடைமரு திடங்கொண் டாரே. (கூ)

மலையுடன் விரவி நின்று மதியிலா வரக்க னூக்கத்
தலையுட னடர்த்து மீண்டே தலைவனு வருள்க ணல்கிச்
சிலையுடை மலையை வாங்கித் திரிபுர மூன்று மெய்தார்
இலையுடைக்கமலவேலி யிடைமரு திடங்கொண் டாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

சூலப் படையுடையார் தாமே போலுஞ்
சுடர்த்திங்கட் கண்ணி யுடையார் போலு
மாலை மகிழ்ந்தொருபால் வைத்தார் போலு
மந்திரமுந் தந்திரமு மானூர் போலும்
வேலைக் கடனஞ்ச முண்டார் போலு
மேல்வினைக டீர்க்கும் விகிர்தர் போலும்
ஏலக் கமழ்குழலாள் பாகர்போலு
மிடைமருது மேவிய வீச னூரே. (௧)

காரார் கமழ்கொன்றைக் கண்ணி போலுங்
காரானை யீருரிவை போர்த்தார் போலும்
பாரார் பரவப் படுவார் போலும்
பத்துப்பல் லூழி பரந்தார் போலும்
சீரால் வணங்கப் படுவார் போலுந்
திசையனைத்து மாய்ம்மற்று மானூர் போலும்
ஏரார் கமழ்குழலாள் பாகர் போலு
மிடைமருது மேவிய வீச னூரே. (௨)

வேதங்கள் வேள்வி பயந்தார் போலும்
விண்ணுலகு மண்ணுலகு மானூர் போலும்
பூதங்க ளாய புராணர் போலும்
புகழ வளரொளியாய் நின்றூர் போலும்
பாதம் பரவப் படுவார் போலும்
பக்தர்களுக் கின்பம் பயந்தார் போலும்
ஏதங்க ளான கடிவார் போலு
மிடைமருது மேவிய வீச னூரே. (௩)

திண்குணத்தார் தேவர்க ணங்க ளேத்தித்
திசைவணங்கச் சேவடியை வைத்தார் போலும்
விண்குணத்தார் வேள்வி சிதைய நூறி
வியன்கொண்டன் மேற்செல் விகிர்தர் போலும்
பண்குணத்தார் பாடலோ டாட லோவாப்
பரங்குன்ற மேய பரமர் போலும்
எண்குணத்தா ரெண்ணா யிருந்தார் போலு
மிடைமருது மேவிய வீச னாரே. (ச)

ஊக முகிலுரிஞ்சு சோலை சூழ்ந்த
வுயர்பொழி லண்ணாவி லுறைகின் றாரும்
பாகம் பணிமொழியாள் பங்க ராகிப்
படுவெண்ட லையிற் பலிகொள் வாரு
மாகமுடை மும்மதிலு மெய்தார் தாமு
மணிபொழில்சூ ழாரு ருறைகின் றாரும்
ஏகம்ப மேயாரு மெல்லா மாவா
ரிடைமருது மேவிய வீச னாரே. (ரு)

ஐயிரண்டு மாறொன்று மானார் போலு
மறுமூன்று நான்மூன்று மானார்போலும்
செய்வினைக ணல்வினைக ளானார் போலுந்
திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கொய்மலராங் கொன்றைச் சடையார் போலுங்
கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையுங் காய்ந்தார் போலு
மிடைமருது மேவிய வீச னாரே. (சா)

பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்ப்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொருகா லுன்கே யென்பர்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பர்
தெரிவரிய குணமஞ்சுஞ் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சுஞ் செப்பி னாரும்
எரியாய தாமரைமே லியங்கி னாரு
மிடைமருது மேவிய வீச னாரே. (எ)

தோலிற் பொலிந்த வுடையார் போலுஞ்
சுடர்வா யரவசைத்த சோதி போலும்
ஆலமமு தாக வுண்டார்போலு
மடியார்கட் காரமுத மானூர் போலும்
காலனையுங் காய்ந்த கழலார் போலுங்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஏலங் கமழ்குழலாள் பாகர் போலு
மிடைமருது மேவிய வீச னூரே. (அ)

பைந்தளிர்க் கொன்றையந் தாரார் போலும்
படைக்கணாள் பாக முடையார் போலும்
அந்திவாய் வண்ணத் தழகர் போலும்
அணிநீல கண்ட முடையார் போலும்
வந்த வரவுஞ் செலவு மாகி
மாறாதென் னுள்ளத் திருந்தார் போலும்
எந்த மிடர்தீர்க்க வல்லார் போலு
மிடைமருது மேவிய வீச னூரே. (கூ)

கொன்றையங் கூவிள மாலை தன்னைக்
குளிர்சடைமேல் வைத்துகந்த கொள்கை யாரும்
நின்ற வநங்கனை நீறா நோக்கி
நெருப்புருவாய் நின்ற நிமல னூரும்
அன்ற வரக்க னலறி வீழ
அருவரையைக் காலா லழுத்தி னூரும்
என்று மிடுபிச்சை யேற்றுண் பாரு
மிடைமருது மேவிய வீச னூரே. (கம)

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஆறு சடைக்கணிவ ரங்கைத் தீயர்
அழகார் படையுடைய ரம்பொற் றோண்மேல்
நீறு தடவந் திடப மேறி
நித்தம் பலிகொள்வர் மொய்த்த பூதம்

கூறுங் குணமுடையர் கோவ ணத்தர்
கோடால வேடத்தர் கொள்கை சொல்லின்
ஈறு நடுவு முதலு மாவா
ரிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (க)

மங்குன் மதிவைப்பர் வான நாடர்
மடமா னிடமுடையர் மாத ராளைப்
பங்கின் மிகவைப்பர் பால்போ னீற்றர்
பளிக்கு வடம்புனைவர் பாவ நாசர்
சங்கு திரையுகளுஞ் சாய்க்கா டாள்வர்
சரிதை பலவுடையார் தன்மை சொல்லின்
எங்கும் பலிதிரிவ ரென்னு ணீங்கா
ரிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (உ)

ஆல நிழல்விருப்ப ராகா யத்த
ரருவரையி னுச்சியா ராணோர் பெண்ணர்
காலம் பலகழித்தார் கறைசேர் கண்டர்
கருத்துக்குஞ் சேயார்தாங் காணா தார்க்குக்
கோலம் பலவுடையர் கொல்லை யேற்றர்
கொழுமழுவர் கோழம்ப மேய வீசர்
ஏல மணநாறு மீங்கோய் நீங்கா
ரிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (ங)

தேசர் திறநினைவார் சிந்தை சேருஞ்
செல்வர் திருவாரூ ரென்று முள்ளார்
வாச மலரினங்கண் மான்றோல் போர்ப்பர்
மருவுங் கரியுரியர் வஞ்சக் கள்வர்
நேச ரடைந்தார்க் கடையா தார்க்கு
நிட்டுருவர் கட்டங்கர் நினைவார்க் கென்றும்
ஈசர் புனற்பொன்னித் தீர்த்தர் வாய்த்த
விடைமருது மேவி யிடங்கொண் டாரே. (ச)

கரப்பர் கரியமனக் கள்வர்க் குள்ளங்
கரவாதே தந்நினைய கிற்பார் பாவம்

துரப்பர் தொடுகடலி னஞ்ச முண்பர்
தூய மறைமொழியர் தீயா லொட்டி
விரப்பர் புரமூன்று நீறு செய்வர்
நீள்சடையர் பாய்விடைகொண் டெங்கு மையம்
இரப்ப ரெமையாள்வ ரென்னு ணீங்கா
ரிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (௫)

கொடியா ரிடபத்தர் கூத்து மாடிக்
குளிர்கொன்றை மேல்வைப்பர் கோல மார்ந்த
பொடியாரு மேனியர் பூதிப் பையர்
புலித்தோலர் பொங்கரவர் பூண நூலர்
அடியார் குடியாவ ரந்த ணாள
ராகுதியின் மந்திரத்தா ரமரர் போற்ற
இடியார் களிற்றுரிய ரெவரும் போற்ற
விடைமருது மேவி யிடங்கொண் டாரே. (சு)

பச்சை நிறமுடையார் பாலர் சாலப்
பழையர் பிழையெலா நீக்கி யாள்வார்
கச்சைக் கதநாகம் பூண்ட தோளர்
கலனொன்று கையேந்தி யில்லந் தோறும்
பிச்சை கொளநுகர்வர் பெரியர் சாலப்
பிறங்கு சடைமுடியர் பேணுந் தொண்டர்
இச்சை மிகவறிவ ரென்று முள்ளா
ரிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (எ)

காவார் சடைமுடியர் காரோ ணத்தர்
கயிலாய மன்னினர் பன்னு மின்சொற்
பாவார் பொருளாளர் வாளார் கண்ணி
பயிலுந் திருவுருவம் பாக மேயார்
பூவார் புனலணவு புன்கூர் வாழ்வர்
புரமூன்று மொள்ளழலாக் காயத் தொட்ட
மூவார் சிலைமலைய ரெங்குந் தாமே
யிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (அ)

புரிந்தார் நடத்தின்கட் பூத நாதர்
பொழிலாரூர் புக்குறைவர் போந்து தம்மிற்
பிரிந்தா ரகல்வாயப் பேயுந் தாமும்
பிரியா ரொருநாளும் பேணு காட்டில்
எரிந்தா ரனலுகப்ப ரேழி லோசை
யெவ்விடத்துந் தாமேயென் றேத்து வார்பால்
இருந்தா ரிமையவர்கள் போற்ற வென்று
மிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (கூ)

விட்டிலங்கு மாமழுவர் வேலை நஞ்சர்
விடங்கர் விரிபுனல்சூழ் வெண்காட் டுள்ளார்
மட்டிலங்கு தார்மாலை மார்பி னீற்றர்
மழபாடி யுள்ளுறைவர் மாகா ளத்தர்
சிட்டிலங்கு வல்லரக்கர் கோனை யன்று
செழுமுடியுந் தோளுஞ்ஞான் கடரக் காலால்
இட்டிரங்கி மற்றவனுக் கீந்தார் வென்றி
யிடைமருது மேவி யிடங்கொண் டாரே. (கம)

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனர்

பண்—தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற்
கைப்பர் பாழ்புக மற்றது போலப்
பழுது நானுழன் றுட்டடு மாறிப்
படுசு ழித்தலைப் பட்டன னெந்தாய்
அழுது நீயிருந் தென்செய்தி மனனே
யங்கணுவர னேயென மாட்டாய்
இழுதை யேனுக்கொ ருய்வகை யருளா
யிடைம ருதுறை யெந்தை பிரானே. (க)

நரைப்பு மூப்பொடு பிணிவரு மின்னே
நன்றி யில்வினை யேதுணிந் தெய்த்தேன்

அரைத்த மஞ்சள தாவதை யறிந்தே
    னஞ்சி னேனம னரவர் தம்மை
உரைப்ப னுன சேவடி சேர
    வுணரும் வாழ்க்கையை யொன்றறி யாத
இரைப்ப னேனுக்கொ ருய்வகை யருளா
    யிடைம ருதுறை யெந்தை பிரானே. (உ)

புன்னு னைப்பனி வெங்கதிர் கண்டாற்
    போலும் வாழ்க்கை பொருளிலை நாளும்
என்னெ னக்கினி யிற்றைக்கு நாளை
    யென்றி ருந்திட ருற்றன னெந்தாய்
முன்ன மேயுன சேவடி சேரா
    மூர்க்க னுகிக் கழிந்தன காலம்
இன்ன மென்றனக் குய்வகை யருளா
    யிடைம ருதுறை யெந்தை பிரானே. (௩)

முந்திச் செய்வினை யிம்மைக்க ணலிய
    மூர்க்க னுகிக் கழிந்தன காலம்
சிந்தித் தென்மனம் வைக்கவு மாட்டேன்
    சிறிச்சிறி தேயிரப் பார்கட்கொன் றீயேன்
அந்தி வெண்பிறை சூடுமெம் மானே
    யாரூர் மேவிய வமரர்க டலைவா
எந்தை நீயெனக் குய்வகை யருளா
    யிடைம ருதுறை யெந்தை பிரானே. (௪)

அழிப்ப ரைவர் புரவுடை யார்க
    ளைவ ரும்புர வாசற வாண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
    கடைமு றையுனக் கேபொறை யானேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொரு டன்னை
    வேண்டேன் மானிட வாழ்க்கையி தாகில்
இழித்தே னென்றனக் குய்வகை யருளா
    யிடைம ருதுறை யெந்தை பிரானே. (௫)

குற்றந் தன்ெனாடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்ணிடை யாரொடு மயங்கிக்
கற்றி லேன்கலை கள்பல ஞானங்
கடிய வாயின கொடுமைகள் செய்தேன்
பற்ற லாவதோர் பற்றுமற் றில்லேன்
பாவி யேன்பல பாவங்கள் செய்தேன்
எற்று ளேனெனக் குய்வகை யருளா
யிடைம ருதுறை யெந்தை பிரானே. (௬)

கொடுக்க கிற்றிலே னொண்பொரு டன்னைக்
குற்றஞ் செற்ற மிவ்வமுத லாக
விடுக்க கிற்றிலேன் வேட்கையுஞ் சினமும்
வேண்டி லைம்புல னென்வச மல்ல
நடுக்க முற்றதோர் மூப்புவந் தெய்தி
நமன்ற மர்நர கத்திட லஞ்சி
இடுக்க ணுற்றன னுய்வகை யருளா
யிடைம ருதுறை யெந்தை பிரானே. (௭)

ஐவ கையரை யரவ ராகி
யாட்சி கொண்டொரு காலவர் நீங்கார்
அவ்வ கையவர் வேண்டுவ தானு
லவர வர்வழி யொழுகி நான் வந்து
செய்வ கையறி யேன்சிவ லோகா
தீவ ணாசிவ னேயெரி யாடீ
எவ்வ கையெனக் குய்வகை யருளா
யிடைம ருதுறை யெந்தை பிரானே. (௮)

ஏழை மானுட வின்பினை நோக்கி
யிளைய வர்வலைப் பட்டிருந் தின்னம்
வாழை தானப்பழுக் குநமக் கென்று
வஞ்ச வல்வினை யுள்வலைப் பட்டுக்
கூழை மாந்தர்தஞ் செல்கதிப் பக்கம்
போக மும்பொரு ளொன்றறி யாத

ஏழை யேனுக்கோ ருய்வகை யருளா
யிடைம ருதுறை யெந்தை பிரானே. (௯)

அரைக்குஞ் சந்தனத் தோடகி லுந்தி
யைவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இரைக்குங் காவிரித் தென்கரை தன்மே
லிடைம ருதுறை யெந்தை பிரானை
உரைக்கு மூர ணுளிதிகழ் மாலை
யுள்ளத் தாலுகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையு மின்றி
நாதன் சேவடி நண்ணுவர் தாமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்

உ

திருவாசகம்

கீர்த்தித் திருவகவல்

இடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்.

போற்றித் திருவகவல்

இடைமரு துறையு மெந்தாய் போற்றி.

திருப்பூவல்லி

எந்தையெந் தாய்சுற்ற மற்றுமெல்லா மென்னுடைய
பந்த மறுத்தென்னை யாண்டு கொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

உ

கருவூர்த் தேவர் திருவிசைப்பா

S-090023

பண்—பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிரு ணடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி யுமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்றோட் டவிர்சடை
மொழுப்பி னழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (௧)

இந்திர லோக முழுவதும் பணிகேட்
டிணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாக மேகலை யரையா
வகந்தொறும் பலிதிரி யடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந் தொலிப்ப
மந்திர கீதந் தீங்குழ லெங்கு
மருவிடந் திருவிடை மருதே. (௨)

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென் றிங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல கொழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனாய்த்
தூங்கிரு ணடுநல்யா மத்தென்
மனனிடை யணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடந் திருவிடை மருதே. (௩)

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்
    கடியனே னுள்கலந் தடியேன்
பணிமகிழ்ந் தருளு மரிவைபா கத்தன்
    படர்சடை விடமிடற் றடிகள்
துணியுமி ழாடை யரையிலோ ராடை
    சுடருமிழ் தரவத னருகே
மணியுமிழ் நாக மணியுமிழ்ந் திமைப்ப
    மருவிடந் திருவிடை மருதே. (ச)

பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற்
    படிவழி சென்றுசென் றேறிச்
சிந்தையுந் தானுங் கலந்ததோர் கல்வி
    தெரியினுந் தெரிவுறு வண்ணம்
எந்தையுந் தாயும் யானுமென் றிங்ங
    னெண்ணில்பல் லூழிக ளுடனாய்
வந்தணு காது நுணுகியுள் கலந்தோன்
    மருவிடந் திருவிடை மருதே. (ரு)

எரிதரு கரிகாட் டிடுபிண நிணமுண்
    டேப்பமிட் டிலங்கெயிற் றழல்வாய்த்
துருகழ னெடும்பேய்க் கணமெழுந் தாடுந்
    தூங்கிரு ணடுநல்யா மத்தே
அருள்புரி முறுவன் முகிழ்நிலா வெறிப்ப
    வந்திபோன் றொளிர்திரு மேனி
வரியர வாடு வாடுமெம் பெருமான்
    மருவிடந் திருவிடை மருதே. (சா)

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி
    னின்றுளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
    காதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்ச மிடர்படா வண்ணந்
    தூங்கிரு ணடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
    மருவிடந் திருவிடை மருதே. (எ

வையவாம் பெற்றம் பெற்றமே றுடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாஞ் செந்தீப் பட்டவிட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின் பென்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (அ)

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலங்கலந் தடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே வம்பனே னுடைய
புலங்கலந் தவனே யென்றுநின் றுருகிப்
புலம்புவா ரவம்புகா ரருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி யனையான்
மருவிடந் திருவிடை மருதே. (கூ)

ஒருங்கிருங் கண்ணி னெண்ணில்புன் மாக்க
ளுறங்கிரு ணடுநல்யா மத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழின் மருதயா ழுதிப்ப
வருங்கருங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடந் திருவிடை மருதே. (கo)

திருச்சிற்றம்பலம்

பட்டினத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

மும்மணிக்கோவை

நேரிசையாசிரியப்பா

கொண்டலி னிருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வா னுருவிற் பையர வார்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை யாடு மப்ப
கைலாய வாண கௌரி நாயக
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்க ணுமையா ணங்கையு
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்குங் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
தாரகற் செற்ற வீரக் கன்னியும்
வரன்முறை படைத்த நான்முகத் தொருவனும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடியுருத் திரரும்
ஆனாப் பெருந்திறல் வானோர் தலைவனும்
செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திர னொருவனுஞ் செந்தீக் கடவுளும்
நிருதியுஞ் சமனுஞ் சுருதிக ணான்கும்
வருணனும் வாயுவு மிருநிதிக் கிழவனும்

எட்டு நாகமு மட்ட வசுக்களும்
மூன்று கோடி யான்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனு மகத்தியன் றானும்
தும்புரு நாரத ரென்றிரு திறத்தரும்
வித்தகப் பாடன் முத்திறத் தடியரும்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்து
மோடும் பன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்து
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல வெம்மித் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தன வென்றுநாய்க் கட்ட மெடுத்தும்
காம்புகுத் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய வன்பின் வரகுண தேவரும்
இனைய தன்மைய ரெண்ணிறந் தோரே
அனையோர் நிற்க யானு மொருவன்

பத்தி யென்பதோர் பாடு மின்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையேன்
நின்னை
இறைஞ்சில னாயினு மேத்தில னாயினும்
வருந்தில னாயினும் வாழ்த்தில னாயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்து நன்மை தீமை
ஆனவை நின்செய லாதலி
னானே யமையு நலமில் வழிக்கே.*

---

* இருபத்தெட்டாஞ் செய்யுளாகிய இதில் மத்தியார்ச்சுன மகிமை சுருக்கமாய்ச் சொல்லப்படுதலால் இங்கே பதிப்பிக்கப் பட்டது.

கணபதி துணை

மத்தியார்ச்சுன மான்மியம்

விநாயகவணக்கம்

உலகமுணர்ந் திடுகருணை யதனொடுநெஞ் சகமதினீடுவகை யெய்தி, அலகில்புக ழுறுகவிகை நிழறனின்மெய் யன்பர்குல மதனைக் காக்கக், குலவுமுப நிடதவரி யணைமீது பரசெழிற்செங் கோல்கைக் கொண்டாங், கிலகுமிடை மருதாண்ட விநாயகனை யெப்பொழுது மிறைஞ்சி வாழ்வாம்.

நைமிசவனத்திலே சௌனகாதிமுனிவர்கள் பௌராணிகோத்தமராகிய சூதமுனிவரை வணங்கி, "ஸ்வாமீ! அடியேங்கள் உய்யும் வண்ணம் எல்லாவிசேஷங்களும் அமைந்த சிவஸ்தலமொன்றை நவின்றருள்க" என்று பிரார்த்தித்தனர். அவர் நெடுநேரம் சமாதிபொருந்தியிருந்து பின்பு நெஞ்ச நெக்குருகக் கண்ணீர்வார மெய்ம் மயிர்சிலிர்ப்ப ஸ்ரீ ஜோதின்மய மகாலிங்க மூர்த்தியையும், ஸ்ரீ பிருகத் சுந்தரகுசாம்பிகையையும், தமதாசாரியராகிய வியாச முனிவரையும் தியானித்துத் துதித்து இந்த ஸ்தலத்தின் மகிமையை யருளிச்செய்வாராயினர்.

ஸ்தலமகிமை

இலங்குமங் திரங்க டம்மி லிசைக்குமஞ் செழுத்து நீடு
நலந்தரு நூல்க டம்மி னவின்றிடு மறையு மெண்ணும்
பலன்றரு தேவர் தம்மிற் பரமனு மதிக மென்னத்
தலங்களி லதிக மாகுந் தனியிடை மருது மன்றே.

அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுப் பற்பல ஸ்தலங்களை உண்டாக்கியருளினர். அவற்றுள் ஸ்ரீ அருணசலம், ஸ்ரீ காசி, திருக்காளத்தி, திருக்கேதாரம், திருவாரூர், திருவலஞ்சுழி, திருவேரகம், ஸ்ரீ சிதம்பரம், திருவெண்காடு, ஸ்ரீ கும்பகோணம், ஸ்ரீ மத்தியார்ச்சுனம் என்னும் பதினெரு தலங்கள் சிறந்தன. அவற்றினுள்ளே, அனுதியாக இருத்தலானும் எல்லா உயிர்களுமொடுங்கிய மஹாராத்திரியில் அவ்வுயிர்களை எழுப்புதற்பொருட்டு ஏகாதச ருத்திரர்கள் வந்து வழிபட்டுச் சிவாநுக்கிரகம் பெறும்படி விளங்கினமையானும், திருவலஞ்சுழி முதலிய மிகச்சிறந்த தலங்களை விநாயகர் முதலிய பரிவார தேவதாஸ்தலங்களாகக் கொண்டிருத்தலானும் மத்தியார்ச்சுனமே சிறந்தது. திருவலஞ்சுழி விநாயகக்கடவுளுக்கும், சுவாமிமலை சுப்பிரமணியப் பெருமானுக்கும், திருவாப்பாடி சண்டேசுரநாயனருக்கும், சூரியனர்கோயில் சூரியன் முதலிய நவக்கிரகங்களுக்கும், சிதம்பரம் நடேசப்பெருமானுக்கும், சீகாழி பைரவக்கடவுளுக்கும், திருவாவடுதுறை நந்திதேவருக்கும், திருவாரூர் ஸோமாஸ்கந்தருக்கும், திருவாலங்குடி தக்ஷிணமூர்த்திக்கும் இருப்பிடங்களாம்.

மத்தியம் - நடு. அர்ச்சுனம் - நின்மலம். இது நின்மலமானஸ்தானமென்று பொருள்பட்டு மத்தியசப்தத்தோடு சேர்ந்துநின்று, இத்தன்மையையுடைய (ஆதிசக்தியின் ஹிருதயகமல) மத்தியஸ்தானத்தை உணர்த்திப்பின்பு அந்த ஹிருதயகமலமத்தியில் தியானிக்கப்பட்டு விளங்கிய

ஸ்ரீ ஜோதிர்மயமகாலிங்கப்பெருமான் முனிவர்களுக்குக் காட்சியளித்தற்பொருட்டு இங்கே எழுந்தருளியிருக்கின்றமையால், அப்பெயர் இந்த க்ஷேத்திரத்திற்கும் வந்தது. அல்லாமல். பின்பு ஒரு காலத்தே தரிசித்தற்குவந்த உரோமசமகாமுனிவர் அர்ச்சுனவனத்தின் மத்தியில் சிவலிங்கப்பெருமா னெழுந்தருளியிருப்பக் கண்டு, "இந்த க்ஷேத்திரம் மத்தியார்ச்சுனம்" என்று வழங்கியபடி கொள்வதும் பொருந்தும். இன்னும் இது தமக்கு ஆதிசக்தி காட்சி கொடுத்தற்கு முனிவர்கள் உண்டாக்கின சண்பகச் சோலையையுடைமையால் சண்பகவனமென்றும், ஆதிசக்தி எழுந்தருளியிருத்தலாற் சக்திபுரமென்றும், சக்தியும் முனிவர்களும் தவம்செய்து பேறுபெற்றமையால் தபோவனமென்றும், சிவபெருமான் ஜோதிவடிவாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினமையால் ஜோதிநகரமென்றும், எல்லாப் புண்ணிய தீர்த்தங்களையுமுடைமையாற் சர்வதீர்த்தபுரமென்றும், வில்வவனத்தையுடைமையால் வில்வவனமென்றும், தன்னிடத்திலிருந்து செய்யப்படும் ஒவ்வொரு புண்ணியமும் பற்பலவாக விருத்தியாதலால் தருமவிருத்திபுரமென்றும், பூமியின்கண் சிவலோகமாக இருத்தலாற் பூலோக சிவலோகமென்றும், வீரசோழன் வழிபட்டு ஆலயத்திருப்பணிசெய்து காடுவெட்டி நகரமுண்டாக்கி நித்தியநைமித்திகங்களை விதிப்படி புரிவித்தமையால் வீரசோழ நகரமென்றும் சொல்லப்படும். இந்த க்ஷேத்திரமகிமை ஸ்காந்தபுராணத்திலும், லிங்கபுராணத்திலும், பிரமகைவர்த்தத்திலும், சிவரகஸ்யாதிகளிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மருதவிருக்ஷத்தின் வரலாறும், சிவபெருமான் காட்சிகொடுத்தருளிய முறையும்

திருக்கைலாய மலையிலே ஒப்புயர்வில்லாத செம்பொற்றிருக்கோயிலிலே அனந்தகோடிசூரியர் உதித்தாற்போன்ற ஒளியையுடைய ரத்னசிங்காதனத்தின்மேலே

எழுந்தருளியிருந்து மகாதேவர் தமது ஞானசக்தியாகிய உமாதேவியாருக்கு ஆகமங்களை உபதேசித்தருளினர். தேவியார் அவற்றையெல்லாம் திருவுளங்கொண்டு மகிழ்ந்து எழுந்துவணங்கி, "எம்பெருமானே! இவ்வுலக வளங்களையும், ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும்படி தேவரீர் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களையும், அவற்றுள் சிறந்ததாகிய ஒன்றனையும் காட்டியருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, "நின்குறிப்பு மிகவும் அழகிது" என்று மகிழ்வுற்றுச் சிவபிரான் உமாதேவியாரோடும் ரிஷபாரூடராய்த் திருக்கைலாயத்தினின்றும் புறப்பட்டு எல்லா விசேஷங்களையும் காண்பித்துக்கொண்டுவந்து காவிரிமாநதியையடைந்து அதன் மகிமைகளை யெடுத்துரைத்து அதன் தென்கரையில் உள்ளதாகிய இந்த க்ஷேத்திரத்திற்கு நேராக ஆகாயத்தில் எழுந்தருளினர். அப்போது கைலையங்கிரியானது தமது பிரிவாற்ருமையால் மிகவும் உன்னதமான மருதமரமாகி அவ்விடத்தே நிற்கக்கண்டு அதனுடையநிழலில் ரிஷபத்தை நிறுத்தி உமாதேவியாரை நோக்கி, "ப்ரியே! இந்த ஸ்தலம் அனாதியேயுள்ளது; நமக்கு அதிகப்பிரீதியை உண்டுபண்ணுவது; இதற்கு ஒப்பான ஸ்தலம் எங்குமில்லை; இதன் அழகை நீ காண்பாயாக" என்று திருவாய்மலர்ந்தருளினர். உமாதேவியார் ஆங்காங்குள்ள தபோவனங்களையும், அவ்வனங்களில் காசிபர் முதலிய முனிவர்கள் தவஞ்செய்தலையும், மற்றவிசேஷங்களையும் நோக்கி அன்புற்றுஆனந்தப்பெருக்கமடைந்தனர். அப்பொழுது உமாதேவியாருடைய திருவிழிகள் கருணை வெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் கிழக்கேசென்று காருண்யாமிர்தம் என்று பெயர்பெற்று ஒரு தீர்த்தமாக விளங்கியது. அக்காலத்தில் சிவபிரானது திருவிழிகளும் கருணைவெள்ளம் பொழிந்தன. அவ்வெள்ளம் இரண்டு பிரிவாகிப் பொன்நிறமுற்றுச்சென்று நீர்வற்றிக்கிடந்த வடமேற்கிலுள்ள தடாகத்திலும் தென்றிசையிலுள்ள தடாகத்திலும் பாய்ந்தது. அவ்விரண்டனுள், வாயுதிக்கி

லுள்ள தடாகத்திலே உயிர்போயுலர்ந்துகிடந்த ஜலசரங்கள்யாவும் உயிர்பெற்று ருத்ரகணங்களாகி ஸ்வாமியை வலஞ்செய்து வாழ்த்தி வணங்கி விமானத்தின்மீதேறிச் சிவபுரமடைந்தன. அங்கே தவஞ்செய்யுமுனிவர்கள் தம்முட்பேசிக் கொள்ளும் வினுவிடைகளைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அப்பால் பார்வதிதேவியாரோடு சுவாமி ஒரு முகூர்த்தகாலம் அவர்களுக்குத் தோன்றுதவண்ணம் எழுந்தருளியிருந்தனர். அப்போது அங்கே வந்த அகஸ்தியமுனிவரை முனிவர்கள் கண்டு பேரானந்த முற்று எதிர்சென்று வணங்கி, "தேவரீர் இங்கே எழுந்தருளியது அடியேங்கள் செய்த பெருந்தவமேயன்றி வேறன்று ; ஆதலால் யாங்கள் உய்ந்தோம். யாக முதலிய கருமங்களைச்செய்யிற் பயனளிப்பது அக்கருமமோ? அன்றியளிப்பவர் சிவபெருமானே? என்னுஞ் சந்தேகம் எமக்கு நெடுநாளாகவுள்ளது; இதனை நீக்கியருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்கவே அகஸ்தியமுனிவர் கன்மம் தானே பயன்தராதென்றும், தருபவர் சிவபெருமானே என்றும், பக்திநெறியாலேயே அவரை அடையவேண்டுமென்றும், அந்தப்பக்திநெறி பெருந்தவத்தா லெய்தற்பாலதென்றும் பற்பல நியாயங்களால் விளக்கி, "முனிவர்களே! அவனருளாலே அவனை யடையவேண்டுமென்று வேதாகமங்கள் கூறுகின்றன; ஆதலால், நீவிர் அருளாகிய உமாதேவியாரைக் குறித்துத் தவஞ்செய்து அவராற் சிவபெருமானை அடையுங்கள்" என்று கூறியருளினர். அப்பொழுது உமாதேவியார், "இவர்களுக்குக் காட்சி கொடுத்தருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்கவே சிவபெருமான், "நாம் இப்பொழுது இவர்களுக்கு வெளிப்படுவது முறையன்று; அகஸ்தியன் மொழிப்படியாகுக" என்று கூறி உமாதேவியாரோடும் கைலைமலைக்கு எழுந்தருளினுர்.

பின்பு அகஸ்தியமுனிவர் கட்டளையின்படி எல்லா முனிவர்களும் அவரோடுகூடி ஸரஸ்வதி தேவியைக்

குறித்துத் தவஞ்செய்து வேதாகமங்களின் உண்மைப் பொருளையறிந்து பின்பு லக்ஷ்மிதேவியைக் குறித்துத் தவஞ்செய்து சிவாராதனத்திற்கு வேண்டிய பாக்கி யத்தை அடைந்து பின்பு சிவபெருமானைத் தமக்குப் பிரத்தியக்ஷமாகத் தரிசிப்பித்தற்குச் சிற்சக்தியான ஆதி சக்தியின் அருள்பெறவேண்டி, அந்தச் சக்திக்குப் பிரிய மான சண்பகச்சோலையொன்றை உண்டாக்கி, அந்தச் சோலையில் காட்சியளிக்க வேண்டுமென்று தவஞ் செய்தனர்; அப்போது அம்பிகை பரமசிவனிடத்துப் பிரியாவிடைபெற்று எழுந்தருளிக் காட்சிகொடுக்கவே முனிவர்கள் தரிசனம் செய்து ஆனந்தபரவசர்களாகி, "தாயே! நாங்கள் சிவபெருமானையும் தரிசிக்கும்படி திருவுளங்கொண்டருளவேண்டும்" என்று பிரார்த்தித் தனர். உடனே பார்வதிதேவியார், தமது ஹிருதய கமலமத்தியில் சிவபெருமானை நினைந்து மௌனமாய்ச் சிவயோகஞ்செய்தனர். முனிவர்கள் அம்பிகைக்குத் தொண்டுசெய்துகொண்டு தவம்புரிந் திருந்தனர்.

இப்படி நிகழுங்காலத்தில் அம்பிகையின் ஹிருதய கமலமத்தியில் நினைந்தபடியே சிவபெருமான் ஜோதின்மய மகாலிங்கமூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சிகொடுத் தருளினார். முனிவர்கள் யாவரும் தரிசிக்கவாற்றாது திகைத்து உமாதேவியாருடைய திருவருளால் தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைந்தார்கள். பின்பு சிவபெரு மான் அருள்மயமாகிய அந்தஜோதின்மய மகாலிங்கத்தி னின்று பிறைமுடியும், மான் மழு அபயம் வரதம் அமைந்த திருக்கரங்கள் நான்கும், தரிசித்தற்கினிய மற்ற அவயவங் களும் விளங்க ஏகநாயக மூர்த்தியாக எழுந்தருளிக் காட்சிகொடுத்தருளினார். அப்பொழுது தேவர்கள் மலர் மழைபொழிந்தார்கள். குபேரன் பொன்மாரி பெய்தான். கந்தர்வர்கள் இனிமையான கானஞ்செய்தார்கள். பூதகணு திபர்கள் வாத்தியங்களை முழக்கினார்கள். இங்ஙனம் காட்சிகொடுத்தருளிய ஏகநாயகரை உமாதேவியார்

வணங்கித் துதித்தார். முனிவர்களும் வணக்கத்துடன் துதிசெய்து, "நாம் செய்த தவம் பலித்தது" என்று ஆனந்தபரவசர்களாயினர். அப்பொழுது சிவபிரான் பார்வதிதேவியாரை நோக்கி, "நினது தவங்கண்டு மகிழ்வடைந்தோம்; நினது கருத்தின்படிக்கும், நமது அன்பனாகிய அகஸ்தியமுனிவன் முனிவர்களுக்குக் கூறியபடிக்கும், இம்முனிவர்களுக்குக் காட்சிகொடுத்தேம். எம்மோடு அபேதமாகிய உனக்கு எம்மால் தருதற்குரியது யாது? யாவரும் அறியும்படி நாம்முன்னர் வடிவமாகக்கொண்ட ஜோதின்மய மகாலிங்கத்தை இந்த க்ஷேத்திரத்தில் அனாதியாகவுள்ள நம்உருவமாகிய லிங்கத்தோடு கலப்பித்துப் பூசிக்கின்றேம்; இதனை ஒருதினம் பூசிப்பவர்கள் இருமைப் பயனையும் எளிதில் அடைந்து முக்தியின்பத்தையும் அடைவார்கள்" என்று மொழிந்தருளி விஷ்ணுமுதலிய தேவர்கள் தத்தமக்கு இயன்ற பணிகளை அன்போடு செய்து பக்கத்தேநிற்கையில், தாம் உரைத்தருளிய வேதாகம விதிப்படி அம்மூர்த்தியை அர்ச்சித்தனர்; பின்பு அருகே ஏவல்செய்து நின்ற தேவர்கள் யாவருக்கும் அவரவர் கருதிய வரங்களையருளி உமாதேவியாரைநோக்கிப் புன்முறுவல் செய்தனர். அப்பொழுது உமாதேவியார், "ஸ்வாமீ! திருமால்முதலிய தேவர்கள் தத்தம் எண்ணம் வாய்ப்பத் தேவரீரைப் பூசிக்கின்றனர். தேவரீர் என்ன பயனைக்குறித்துப் பூசித்தீர்?" என்று கேட்கவே சிவபெருமான், "உமையே! நம்மைப் பூசிக்கும் முறையை இம்முனிவர்க்கு அறிவுறுத்தற்பொருட்டே" என்றுசொல்லி உமாதேவியாரது வேண்டுகோளின்படி முனிவர்களைநோக்கி, "நீங்கள் வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றனர்; அவர்கள் "கிருபாநிதியே! அடியேங்களுக்குச் சிவஞானம் அருளுக" என்றார்கள். சிவபிரான் அப்படியே ஞானோபதேசஞ்செய்து சிவலிங்கத்தின் பெருமையையும், பூசைசெய்யும் முறையையும், பூசிப்பவர்கள் அடையும் பயனையும் விரித்துச் சொல்லியருளினர். அப்பால் தேவர்

களும் முனிவர்களும் விசுவகர்மாவை வருவித்து ஆலயம் அமைக்கும்படிகூற, அவன் விதிப்படி கர்ப்பக்கிருகமும், அர்த்தமண்டப முதலிய மண்டபங்களும், திருமாளிகைப் பத்திமுதலியனவும், ஆவரணதேவர்கள் ஆலயங்களும், வலப்பக்கத்தில் பிருகத்சுந்தரகுசாம்பிகையின் ஆலயமும் ஒரு கணப்பொழுதில் மனத்தால் நிருமித்தனன். அவ்வவ்வாலயங்களில் அந்த அந்தத் தேவரெழுந்தருளியிருப்ப அவர் விதிப்படி பூசைபுரிந்து இன்புற்றனர்.

உரோமச முனிவரும் வீரசோழனும் வழிபட்டது

உரோமசரென்னும் முனிபுங்கவர் மருதவனேசரை வணங்குதற்பொருட்டுத் தமது தபோவனத்தினின்றும் புறப்பட்டுப் பலநாடுகளையுங் கடந்து இந்த ஸ்தலத்தை யடைந்து இதனது சிறப்பைநோக்கி வருங்கால், திருக்கோயிலின் வடமேற்கிலுள்ள தீர்த்தத்தில் ஒரு காகம் வந்துபடிந்து பொன்னிறமுற்று, மருதமரத்திலிருந்து பரமசிவனைத் துதிப்பதை வியப்புடன் நோக்கி, "காகமே! உன் வரலாறு யாது? சொல்" என்று வினவினர். காகம், "நான் முற்பிறப்பில் ஒரு பிராமணன். வேதசாஸ்திரபுராணங்களையும், விதி விலக்குகளையும் நன்றாக அறிந்தவன். ஒரு நாள் சூரியக்கிரகணபுண்ணியகாலத்தில் பலரும் ஸ்நானம் செய்து தானதர்மாதிகளைப் புரியும்பொழுது நானும் சென்று ஸ்நானம்பண்ணிச் செய்யவேண்டுவனவற்றை யெல்லாம் செய்து ஓர் அரசனிடத்தில் தானம் வாங்கினேன். ஆசையடங்காமையால் மற்றோரரசனிடத்தும் சென்று தானம் வாங்கத்தொடங்கினேன். அவன் எனது மார்பிலுள்ள சந்தனத்தைக்கண்டு, 'நீமுன்னமே யாரிடத்தேனும் தானம் வாங்கியதுண்டோ?' என்று வினவ, நான் 'ஆம்' என்றேன். அரசன் கோபமுற்று, 'வீடுதோறும் சென்று, இரைகளைக் கவரும் காகம்போலப் பலரிடத்தும் தானம் வாங்கக் கருதினமையால் நீ காகவடிவம் அடையக் கடவாய்' என்று சபித்தான். நானும் அரசனைச்சபிக்க

எண்ணுங்கால், அவனது புரோகிதனாகிய சுசங்கியனென்பவன் என்னைப் பணிந்து, 'பலவுயிர்களையும் காக்கின்ற அரசனைச் சபியற்க. அரசன் சபியாவிடினும் நீ காகவடிவமடைதற்குத் தடையில்லை; நீ அடையுங் காகவடிவம் ஒரு புண்ணியதீர்த்தத்தால் நீங்கும்' என்று கூறி மிகவும் பிரார்த்தித்துக்கொண்டமையால், நான் கோபம் தணிந்து காகவடிவம்பெற்றுப் பழைய ஞாபகத்தோடும் பல தீர்த்தங்களிலும்படிந்து முன்னரடைந்துள்ள தவப்பேற்றால், இந்த ஸ்தலத்தையடைந்து இந்தத் தீர்த்தத்திற்படிந்து இந்த ஜோதின்மய மகாலிங்கத்தின் கிருபையாற் பொன்வடிவம் பெற்றேன். உம்மையும் தரிசித்தேன்; நற்கதியுமடைவேன். இனி எனக்கு என்ன குறை?' என்று சொல்லிற்று. அப்போது சிவகிருபையாற் கோடி சூரியப்பிரகாசமுள்ள விமானமொன்று பல தேவகணங்களோடும்வரவே காகம் ருத்திரவடிவமுற்று அதிலேறிப் பலசிறப்புடன் கயிலையங்கிரியிற் சென்று அளவில்லாத இன்பமுற்றிருந்தது.

இவ்வாறு சென்றதைக்கண்ட உரோமசமகாமுனிவர், மிக்க ஆச்சரியமுற்று மருதவனத்தால் மூடப்பட்ட திருக்கோயிலையடைந்து ஸ்வாமியைவணங்கி, 'அடியேனையும் ஆட்கொண்டருளல்வேண்டும்' என்று பிரார்த்தித்து வெளியே வந்து ஒருவரையும் காணாது திகைப்புற்றுப் பரமசிவனைப் பிரார்த்தித்துநின்றார். அப்பொழுது தமக்குக்காட்சி யளித்த திருநந்திதேவரை நமஸ்கரித்து, "இத்திருக்கோயிலில் எல்லாச் சிறப்பும் அமைந்திருப்ப, மனிதர்கள் மட்டும் இல்லாமைக்கு என்ன காரணம்?" என்று வினவினர். அப்பொழுது திருநந்திதேவர், "முன்னம் இங்கிருந்து சிவாராதனம் செய்துவந்த அகஸ்தியமுனிவர் முதலாயினோர் சிவாஞ்ஞையால் திருவெண்காட்டையடைந்து அங்குள்ள முனிவர்களோடு யாகஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் நீங்கினமையால் பௌத்தர் மேலிட்டு இத்தேசத்தாரையும் சோழனையும் வேறுபடுத்தினர்.

அதனால் இந்நகரம் மருதங்காடுகொண்டது. பூசித்தற்கு வேறொருவரும் இல்லாமையால் விநாயகக்கடவுள் சிவாராதனஞ்செய்தலோடு சிவாஞ்ஞையால் அன்பர்களுக்கு யாதோர் இடையூறும் அணுகா வண்ணம் ஆண்டுவருகிறார். உமது வரவையும், உம்மால் இங்கே சிவநேயம் தழைத்தோங்குமென்பதையும், முன்பு சிவபிரான் விநாயகருக்குக் கூறியருளினர்" என்று கூறினர். முனிவர் ஆனந்தமுற்று, "ஸ்வாமீ! அடியேனுக்குச் சிவபூசா விதியை அருளுக" என்று வேண்ட அப்படியே அவர் உபதேசித்தருளினர். பின்பு முனிவர் நாள்தோறும் பூசித்து ஸாம்பதக்ஷிணாமூர்த்தியாகத் தமக்குப் பரமசிவன் காட்சிகொடுத்தருளப்பெற்று மீட்டும் சிவாராதனம் செய்துகொண்டு இந்த ஸ்தலத்தே வசித்திருந்தனர்.

அக்காலத்திலே காஞ்சீபுரத்தில் சோழபரம்பரையில் தோன்றிய வீரசோழனென்பவன் எல்லா வித்தைகளிலும் சிறந்து சிவபக்திச் செல்வம் வாய்ந்து அரசாண்டு வந்தான். அவன் ஸ்தலயாத்திரைசெய்ய நினைந்து புறப்பட்டுப் பலதலங்களையும் தரிசித்துக்கொண்டேவந்து, இந்த க்ஷேத்திரத்தையடைந்து ஸ்வாமி தரிசனஞ்செய்து அளவிறந்த மகிழ்ச்சியுடையவனாகி உரோமசமகாமுனிவரால் கட்டளையிடப்பெற்று விதிப்படி ஆலயத்திருப்பணி செய்து காடுவெட்டி நகரமுண்டாக்கி அதில் நான்கு வருணத்தாரையும் மற்றையோரையும் முறையே குடியேற்றிச் சிவபிரானுக்கு நித்தியபூசை முதலியவற்றை முன்னையினுஞ் சிறப்பாகச்செய்வித்துப் புஷ்யோத்ஸவத்தையும் விதிப்படி நடத்தி மேலும் வேண்டுவனவற்றையெல்லாஞ்செய்து இந்த ஸ்தலத்திலிருந்தே பலநாள் அரசாண்டு வாழ்ந்து, தனது புத்திரனுக்கு மகுடம் சூட்டிப் பின்பு சிவபதமடைந்தான். உரோமசமகாமுனிவரும் பலமுனிவரோடு இந்த ஸ்தலத்திலேயே சிவயோகம் பயின்று வசித்திருந்தார்.

மார்க்கண்டேய முனிவர் பேறுபெற்றது

மார்க்கண்டேயமுனிவர் அர்த்தநாரீசுவர வடிவம் தரிசிக்க விரும்பி இந்த ஸ்தலத்தை அடைந்து தவஞ் செய்து பரமசிவன் அந்த வடிவினராகிக் காட்சியளிக்கவே தரிசனம் செய்து பேரானந்தமடைந்தார்.

சுகீர்த்தி மகப்பேறடைந்தது

காஞ்சீபுரத்தில் முன்னம் அரசனுகவிருந்த சுகீர்த்தி யென்பவன் தனக்குப் புத்திரனில்லாமையால் வருந்தினுன். அக்காலத்தில் திருவெண்காட்டில் யாகஞ்செய்துகொண்டு எழுந்தருளியிருந்த அகஸ்தியமுனிவரையடைந்து பணிந்து தன் மனக்குறையை விண்ணப்பஞ்செய்தான். அவர், "பிதிர்களுக்குத் திருப்திசெய்தாற் புத்திரன் உண்டா வான். அதற்கு மற்ற இடங்களெல்லாவற்றினும் திரு விடைமருதூரே சிறந்தது. அந்த க்ஷேத்திரத்தில் அங்ஙனம் செய்து பேறுபெற்றோர் அநேகர். நீயும் அங்கே சென்று நான் சொன்னபடி செய்து பேறுபெறுதி" என்று கூறியருளினர். அரசன் விடைபெற்று இந்த ஸ்தலத்தை யடைந்து சுவாமிதரிசனஞ் செய்து பிதிர்களுக்குத் திருப்திசெய்து சற்புத்திரனையடைந்து பெருமகிழ்வுற்றுப் பலநாள் இந்த ஸ்தலத்தின் கண் இருந்து அரசாண்டு பின்பு புத்திரனுக்கு முடிசூட்டிச் சிவபதமடைந்தான்.

வசிஷ்டர் முதலியோர் சித்திபெற்றது

வசிஷ்டர் முதலிய பலமுனிவர் அஷ்டமாசித்தியைப் பெறுதற் பொருட்டு ஒரு யாகஞ்செய்ய நினைந்தனர். அப்போது ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளைப் பணிந்து தம்முடைய எண்ணத்தைக்கூறி, "யாகஞ்செய்தற்குரிய ஸ்தானமொன்று தெரிவித்தருளுக" என்று விண்ணப்பம் செய்ய, அவர் இந்த ஸ்தலத்தின் மகிமைகளை அறிவுறுத்தி அம்முனிவர்களுடன் இந்த க்ஷேத்திரத்தை அடைந்து ஸ்வாமியை அவர்களுக்குத் தரிசனஞ்செய்வித்துக் கங்கா தேவியை நினைத்தனர். உடனே வந்த கங்காதேவியை

நோக்கி அவர், "சிவபிரானுக் கபிஷேகித்தற்பொருட்டும், யாவருமாடி உய்தற்பொருட்டும் இந்த ஸ்தலத்தில் இருப்பாயாக" எனவே கங்காதேவி அவ்வாறே மூலஸ்தானத்திற்கு வடகிழக்கில் ஒரு கிணறு வடிவாய் அமர்ந்தனள். குமாரக்கடவுள் அந்தக்கங்கா தீர்த்தத்தினல் ஸ்வாமிக்கு அபிஷேகஞ்செய்து பூசித்தனர். முனிவர்களும் குமாரக் கடவுளின் கட்டளைப்படியே காவிரியிலும் மற்றத்தீர்த்தங்களிலும் இந்தக்கங்காதீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து பரமசிவனை வழிபட்டு அவரது அனுக்ஞைபெற்றுப் பின்பு வேண்டுவனவற்றைக் கொண்டு குறித்தபடி யாகஞ் செய்தார்கள்; முடிவில் பரமசிவன் அம்பிகையோடும் ரிஷபாரூடராய்க் காட்சியளித்தனர். முனிவர்கள் தரிசனம் செய்து தாம் விரும்பிய சித்திகளை அடைந்து பலநாள் இந்த ஸ்தலத்தில் வழிபாடு செய்துகொண்டிருந்து தம்மை அடைந்தவர்களுக்கும் அந்தச் சித்திகளையளித்து ஸ்வாமியிடத்தில் விடைபெற்றுத் தங்கள்தங்கள் தபோவனமடைந்து தவஞ்செய்வாராயினர்.

தீர்த்த மகிமை

(க.) காருண்யாமிர்தம்:—இந்த ஸ்தலத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் இது சிறந்தது. இதில் சித்திரை விஷு புண்ணியகாலத்தில் ஸ்நானம் பண்ணுதல் விசேஷம். இந்தத் தீர்த்தத்தின் வடகீழ்த்திக்கில் திரிமூர்த்தி வடிவினதாகிய அரசமரமொன்று உண்டு. சோமவார அமாவாசையின்காலையில், இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அந்த அரசமரத்தை ஏழுமுறை வலம்வருபவர்கள் உலகையெல்லாம் வலம்வந்த பலனையடைவார்கள். வேதாத்தியயனம் செய்யாத பிராமணனும், சிவலிங்கத்தையும் பெண்களையும் விற்றவனும், மதுபானம் செய்தவனும், சிராத்தஞ்செய்யாது விட்டவனும், களவுகொலை செய்தவனும், மாதாபிதாக்களை இகழ்ந்தவனுமாகிய இவர்கள் இதில் ஸ்நானம்பண்ணுவாராயின் அப்பாவத்தினின்

றும் நீங்குவார்கள். இதில் ஸ்நானஞ்செய்பவன் அஷ்டை சுவரியத்தையும், சதுர்த்தச வித்தைகளையும் அடைவான்; விரோதிகளும் வியாதிகளும் நீங்கப்பெற்று, மறுமையிற் சிவ சாரூபத்தையும் பெறுவான்; உலகத்திலுள்ள எல்லாப் புண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணின பலனை ஒருங்கேயடைவான். இதில் ஏதாவது ஒரு காலத்தில் ஸ்நானம் பண்ணிப் பிதிர்களைக் குறித்துத் தர்ப்பணஞ் செய்வோர் ஒரு வருஷத்திலுள்ள பிதிர்தினங்களாகிய *தொண்ணூற்றாறுதினத்திலும் பிதிர் சிராத்தம்பண்ணின பலனை அடைவார்கள். இந்தத்தீர்த்தத்தால் பேறு பெற்றோர் பலர்.

முன்னொருகாலத்தில் கங்கை, யமுனை, தாமிரபர்ணி, வாணி, சோணபத்திரை முதலிய நதிகள் திருக்கைலாயத்தை அடைந்து பரமசிவனை வணங்கி வழிபட்டு, "ஸ்வாமீ! ஸ்நானம்பண்ணுபவர்கள் எம்பால் நீக்கிய பாவங்களால் மலினமுற்று வருந்துகின்றோம். இத்துன்பம் நீங்குமாறு அருள்புரிக" என்று பிரார்த்திக்கவே பரமபதி, "காருண்யாமிர்தத்தில் ஸ்நானம் பண்ணுங்கள். உங்கள் எண்ணம் வாய்க்கும்" என்றருளினர். அதுகேட்டு அவர்கள் மகிழ்வுற்று விடைபெற்று இந்த ஸ்தலத்தையடைந்து இதில் ஸ்நானம்பண்ணித் தமது மலினம் நீங்கினர். அவ்வாறே வருஷந்தோறும் சித்திரை விஷு புண்ணியகாலத்தில் இதிலாடித் தம் குற்றங்களைப்போக்கித் தமக்குரிய இடங்களையடைவாராயினர்.

இவ்வண்ணம் நிகழுங்காலத்தில் மிதிலாநகரத்தின் அரசனாகிய இஷ்டரோமனென்பவன் புத்திரனில்லாது வருந்தி உதங்க முனிவரரால் ஏவப்பட்டு மனைவியோடு இந்தஸ்தலத்தையடைந்து தினந்தோறும் காருண்யாமிர்தத்தில் ஸ்நானம்பண்ணிப் பரமசிவனை வழிபட்டிருக்கும்

---

*தொண்ணூற்றாறு சிராத்தங்களாவான :—

மந்வாதி, 14; மாளயம், 16; யுகாதி, 4; ஸங்கிராந்தி, 12; தர்சம், 12; வியதீபாதம், 13; வைதிருதி, 13; அஷ்டகம், 12.

போது, அவன்மனைவி கருப்பமுற்று ஒரு சற்புத்திரனை ஈன்றாள். அரசன் மகிழ்ந்து சிலநாள் மருதவனேசருக்குப் பலபணிகள் செய்துவந்து பின்பு தன் நகரமடைந்து புத்திரனுக்குப் பதினாறுபிராயமாகுகையில், காசிராஜன் புத்திரியை விவாகஞ்செய்யக்கருதி, தனக்குரிய எல்லாப் பரிவாரங்களோடும் காசிநகரமடைந்து அந்நகரத்தரசனால் அமைக்கப்பட்ட மாளிகையை மேவி, மறுநாட்காலையில் ஸ்நானம்பண்ணுதற்பொருட்டுக் கங்கைக்கரையையடைந்து நின்றான். அப்போது ராஜகுமாரன் முன்னதாக அக்கங்கையில் இறங்கினன். அந்தக்காலம் கங்கா்நதி இந்தக் காருண்யாமிர்தத்திற்கு வருங்காலமாதலால், அந்தக் குமாரனோடு அந்தர்வாகினியாக இந்தத்தீர்த்தத்தையடைய அக்குமாரன் கண்டோர் ஆச்சரியமுறும்படி கரையேறி இந்நகரில் அரசாண்டுவந்த சோழராஜன் மனையில் அவனால் ஆதரிக்கப்பட்டிருந்தனன். அங்கே இஷ்டரோமன் கங்கையிலிறங்கிய தனது புத்திரனைக்காணாது கவலையுற்றுநிகழ்ந்ததைஆகாயவாணியால்அறிந்துஉடனே புறப்பட்டுச் சிலநாட்களில் இந்த க்ஷேத்திரத்தையடைந்து தனது புத்திரனைக்கண்டு மகிழ்வுற்று அவனுடன்சென்று சுவாமிதரிசனஞ்செய்து விடைபெற்றுக் காசியையடைந்து அப்புத்திரனுக்கு விவாகஞ்செய்வித்துத் தனது ராஜதானியாகிய மிதிலாநகரம் சென்று அரசாண்டு வாழ்ந்திருந்தான்.

(உ.) பாணதீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு வடகீழ்த்திசையில் உள்ளது. இதற்குத் தேவதை இராமன். தீர்த்தபாலர் முருகக்கடவுள். ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் அரசு. இதில் வைகாசிமாசத்துப் பௌர்ணிமையில் ஸ்நானம்பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நானம்பண்ணுவோர் பால், தயிர், நெய் என்பனவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இதில் பிதிர்களைக்குறித்துத் தர்ப்பணஞ்செய்தால் கயையிற்செய்த பலன் உண்டாகும். முன்னம் தசரதசக்கரவர்த்தியின் ஆஞ்ஞைப்படி தண்டகாரணி

யத்தை யடைந்த இராமன் இந்த ஸ்தலத்தை யடைந்து தனது நியமத்தைமுடித்தற்பொருட்டுத்தீர்த்தமுண்டாக்க வேண்டி ஒருபாணத்தைப் பூமியிற் பிரயோகஞ்செய்ய உண்டானமையால் இது பாணதீர்த்தமென்று பெயர் பெற்றது. இதன் வடகரையில் இராமனால் அர்ச்சிக்கப் பட்டெழுந்தருளியிருக்கின்ற பாணலிங்கத்தைத் தரிசிப் போர் வேண்டியவற்றைப்பெறுவர்.

(ஙு.) பராசரதீர்த்தம்:—இது காருண்யாமிர்தத்திற்கு வடகிழக்கில் ஓரம்புவீழ் தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை வாயு. தீர்த்தபாலர் பைரவக்கடவுள். ரிஷி கண்ணுவர். விருக்ஷம் வேம்பு. இதில் மார்கழிமாசத்தில் ஸ்நானம்பண்ணுதல் விசேஷம். இதில் ஸ்நானம்பண்ணு வோர் திலதானஞ்செய்தல்வேண்டும். பராசரமுனிவர் மச்சகந்தியைச் சேர்ந்தமையால் அருவருப்படைந்து மனக் கலக்கமுற்று அதை மாற்றவெண்ணி உரோமசமகாமுனி வரால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அந்த அருவருப்பொழிந்து இன்புற்றனர். இதனால் இத்தீர்த்தம் பராசரதீர்த்தமென்று பெயர் பெற்றது.

(சு.) சோமதீர்த்தம்:—இது காருண்யாமிர்த தீர்த்தத் திற்குக்கிழக்கே ஓரம்புவீழ்தூரத்தில் உள்ளது. இதற்குத் தேவதை சந்திரன். தீர்த்தபாலர் சண்டேசுரர். ரிஷி கௌதமர். விருக்ஷம் அடம்பு. இதில் சோமவாரத்தில் ஸ்நானம்பண்ணுதல் விசேஷம். ஸ்நானம்பண்ணுவோர் கன்னிகாதானம், பாயசதானம், பலதானம் முதலியவற் றைச் செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்தஸ்நானத்தால் பஞ்சமகாபாதகம் (கொலை, பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை) முதலியன நீங்கும். இந்த க்ஷேத்திரத்தி லுள்ள கனகதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி க்ஷயரோகம் ஒழிந்த சந்திரனால் உண்டாக்கப்பட்டதாதலின் இஃது இப்பெயர்பெற்றது.

(ரு.) வேறொருசோமதீர்த்தம்:—இது கனகதீர்த்தத் திற்குத் தென்மேற்கே ஓரம்புவீழ்தூரத்தில் உள்ளது.

இதற்குத்தேவதை ஸ்ரீ சங்கரர். தீர்த்தபாலன் சந்திரன். ரிஷி துர்வாசர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம்பண்ணு வோர் நெய், எள், வஸ்திரம், அரிசி, புஷ்பம், சந்தனம் என்பவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் இழிகுலந்தோருடைய ஆகாரசேஷமும், ஸ்திரீசேஷ முதலியனவும் புசித்ததனாலுண்டாகுந்தோஷம் நீங்கும். சந்திரன் முற்காலத்தில் பெரியபாவமொன்றைச் செய்து அதனால் தனது கலை குறைதலைக்கண்டு மிகவும் கவலையுற்று இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிக் கலை வளரப்பெற்று வாழ்வுற்றனன். இதனால் இந்தத்தீர்த்த மும் அப் பெயர்பெற்றது.

(கூ.) ருத்ரதீர்த்தம்:—இது மூலஸ்தானத்திற்குத் தெற்கே உள்ளது. இதன் தேவதை ஈசுவரன். தீர்த்த பாலன் கருடன். ரிஷி பிப்பிலர். விருக்ஷம் தமாலம். இதில் நீராடுவோர் தேன், கம்பளம் இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் கொடிய வியாதி களெல்லாம் தீரும். "யாம் சிவபெருமானையொத்திருக்கி றோம்" என்று தருக்கிய உருத்திரர் பலர் அவராற் சபிக் கப்பட்டு மீன்வடிவமுற்றுச் சிலநாளைக்குப்பின் இந்தத் தீர்த்தசம்பந்த விசேஷத்தால் அம்மீன்வடிவம் நீங்கிப் பண்டைவடிவமுற்றுச் சிவபெருமானுக்கு அணுக்கர்களா யினர். இதனால் இந்தத் தீர்த்தம் உருத்திரதீர்த்தமென்று பெயர்பெற்றது. மற்றொருகாலத்தில் நிமிச்சக்கரவர்த்தி யின் குமாரனான திருஷ்டகேது என்பவன் தனது புத்திர னுக்கு நேரிட்ட கண்டமாலையென்னும் நோயைத் தீர்த் தற்குப் பலவாறு முயன்றும் அது தீராமையாற் கவலை கூர்ந்து பூர்வ ஜன்மத்திற்செய்த சிவத்துரோகத்தால் அவ னுக்கு அந்நோய் வந்ததென்பதையும் இந்த ருத்ரதீர்த்தத் தில் ஸ்நானம் பண்ணினால் அது நீங்குமென்பதையும் காத்தியாயனமுனிவரால் அறிந்தான்; பின்பு இந்த ஸ்தலத்தையடைந்து, இதில் ஸ்நானம்பண்ணுவித்த வுடனே கண்டமாலை இருந்த இடம்தெரியாமல் காய்ந்து

போயிற்று. அரசன்கண்டு மகிழ்ந்து வெகுகாலம் இந்த ஸ்தலத்திலேயே வாசஞ்செய்து தனது தேசத்திற்பாதியை ஸ்ரீ மகாலிங்கப்பெருமானுக்கு அர்ப்பணஞ்செய்து பின் தன் நகரை அடைந்து வாழ்ந்திருந்தான்.

(எ.) பதுமதீர்த்தம் :—இது இரண்டாவதான சோம தீர்த்தத்திற்குத்தென்கிழக்கில்உள்ளது. தேவதை ஸ்ரீமகா லிங்கமூர்த்தி. தீர்த்தபாலன் நாகமுகன். ரிஷி பிர்ம்மா. விருக்ஷம் வில்வம். இதில் ஸ்நானம்பண்ணுவோர் தானியம், வெல்லம், உப்பு, பருத்தி இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இதில் நீராடினுல் எல்லாச் செல்வங்களையும் பெறலாம்; பாவங்களெல்லாம் நீங்கும். முன்பு இதில் ஸ்நானம் பண்ணிய விசேஷத்தால் மகாபலி சக்கரவர்த்தி மூன்று உலகங்களையும் ஆண்டான்.

(அ.) பாண்டவதீர்த்தங்கள் :—இவை பதுமதீர்த்தத்திற்குத் தெற்கே தருமதீர்த்தம், வீமதீர்த்தம், அர்ச்சுன தீர்த்தம், நகுலதீர்த்தம், சகாதேவதீர்த்தம் என ஐந்தாக உள்ளன. இவற்றிற்குத் தேவதைகளும் தீர்த்தபாலர்களும் முறையே சம்பு, நந்திதேவர், சுப்பிரமணியர், பிருங்கி, சண்டேசுரர் என்பவர்களாவர். ரிஷிகள் பரத்துவாசர், ஐதுகர்ணர், கௌதமர், மாண்டவியர், பயிலர் என்பவர்கள். விருக்ஷங்கள் நாவல், மா, நெல்லி, ஆல், வேம்பு என்பன. இவற்றில் ஸ்நானம்பண்ணுவோர் முறையே உதகும்பம், குடை, விசிறி, வஸ்திரம், பாதுகை என்பவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இதில் ஸ்நானம் செய்தால் எல்லாச் செல்வமும் உண்டாகும்; நோயும் பகையும் நீங்கும். சூதாட்டத்தால் தமது செல்வ முழுவதையும் இழந்த பாண்டவர் ஐவரும் வனவாசம் பண்ணுகையில், கண்ணபிரானுல் ஏவப்பட்டு இந்த ஸ்தலத்தையடைந்து சிவபிரானைத் தரிசித்து அப்பொழுது உண்டான அசரீரிவாக்கின்படி இந்தத் தீர்த்தங்களை முறையேயுண்டாக்கி இவற்றில் பலநாள் ஸ்நானம்பண்ணிக்கொண்டிருந்து பின்பு தமக்குரிய எல்லாச் செல்வங்

களையும் அடைந்தனர். இதனால் இந்தத் தீர்த்தங்கள் பாண்டவதீர்த்தமென்று பெயர்பெற்றன.

(கூ.) இந்திர தீர்த்தம்:—இது திருக்கோயிலுக்குக் கிழக்கேயுள்ள சோமதீர்த்தத்திற்குத் தெற்கே இருக்கின்றது. தேவதையும், ரிஷியும் இந்திரன். தீர்த்தபாலர் சந்திரசேகரர். விருக்ஷம் முள்ளிலவு. இதில் ஸ்நானம்பண்ணுவோர் இரும்பு, வெள்ளி, எருமை, பால், தாம்பூலம் இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இந்திரன் முன்பு வலாசுரனைப் போரில் வெல்லமாட்டாது வஞ்சனையால் கொன்ற தோஷத்தையும், பாகாசுரனைக்கொன்ற தோஷத்தையும் இந்தத் தீர்த்தஸ்நானத்தால் அகற்றிப் பரிசுத்தனாயினன். இதனால் இஃது இந்திர தீர்த்தமென்று பெயர்பெற்றது.

(கo.) அக்கினி தீர்த்தம்:—இஃது இந்திர தீர்த்தத்திற்குத் தெற்கே மூன்றம்புவீழ் தூரத்தேயுள்ளது. தேவதை ஸ்ரீசங்கரர். தீர்த்தபாலன் அக்கினிதேவன். ரிஷி கபிலர். விருக்ஷம் நெல்லி. இதில் ஸ்நானம்பண்ணுவோர் தயிர், நெய், கறவைப் பசு இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். க்ஷேத்திரபாலராகிய பைரவக்கடவுள் ஒரு தினம் உலாவி வருகையில் அவருடைய சூலம் அழுந்திய இடத்திலுண்டானமையால், முன்பு இதற்குச் சூலகாதமென்று ஒரு பெயர் உண்டாயிற்று. அக்கினிதேவன் காண்டவவனத்திலுள்ள உயிர்களையெல்லாம் எரித்து வருத்தினபோது தனக்குண்டானபாவத்தை இதில் ஸ்நானம்பண்ணிப் போக்கி உய்ந்தனன். அதனால் இது பின்பு அக்கினி தீர்த்தமென்று பெயர்பெற்றது.

(கக.) யம தீர்த்தம்:—இஃது அக்கினி தீர்த்தத்தினுடைய தென்மேற்கில் ஏழம்புவீழ் தூரத்தில் தெற்கேயுள்ளது. இதற்குத்தேவதை அகோரமூர்த்தி. தீர்த்தபாலன் ரிடன். ரிஷி யமன். விருக்ஷம் பாதிரி. இதில் ஸ்நானம் பண்ணுவோர் எள், இரும்பு, பொன், பருத்தி, கம்பளம், எருமை, எருமைக்கடா இவற்றைத் தானஞ்செய்தல்

வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானத்தால் இம்மையிற் குஷ்டநோய் முதலியனவும், மறுமையில் யமவாதையும் நீங்கும். இந்த ஸ்தலத்தில் தவஞ்செய்த அம்பிகையின் தவச்சாலையைக் காத்திருந்த யமனால் உண்டாக்கப்பட்டதனால் இது யமதீர்த்தமென்று பெயர்பெற்றது. மற்றொரு காலத்தில் அகஸ்தியமுனிவர் சிவபெருமானது அகோரவடிவத்தைக்காண எண்ணி, இந்தத்தீர்த்தத்தின் கரையில் தவஞ்செய்து தமது எண்ணப்படியே பரமசிவன் காட்சி கொடுத்தருளப்பெற்றுப் பின்னும் வேண்டிய வரங்களைப் பெற்றனர். அகஸ்தியமுனிவருக்குக் காட்சிகொடுத்த வண்ணமே இதன் கரையில் சிவபிரான் அகோரவடிவாக எருந்தருளியிருக்கின்றனர். இதில் ஸ்நானம்பண்ணி இந்த மூர்த்தியைத் தரிசிப்போர் தமது இஷ்டசித்திகளெல்லாவற்றையும் பெற்றுத் திருவருட்குப் பாத்திரராவார்.

(கஉ.) நிருதிதீர்த்தம்:—இதுயமதீர்த்தத்திற்கு மேற்கே மூன்று அம்புவீழெல்லையில் உள்ளது. இதற்குத் தேவதை விரூபாக்ஷர். தீர்த்தபாலன் நிருதி. ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் கருங்காலி. இதில் ஸ்நாநம்பண்ணுவோர் கூஷ்மாண்டம், உழுந்து, எண்ணெய், எள்ளன்னம் முதலியவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இதனால் ஜ்வரம் முதலிய நோயும், பைசாச முதலியவற்றால் உண்டாகும் வாதையும் நீங்கும். நிருதி இதனை யுண்டாக்கி இதனால் யாவரும் நன்மையடையும் வண்ணம் சிவபெருமானிடத்து வரம்பெற்றனன். இதனால் இது நிருதிதீர்த்தமென்று பெயர்பெற்றது.

(கங.) வருணதீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு மேற்கே பதினைந்து அம்புவீழெல்லையில் உள்ளது. இதற்குத் தேவதை சத்தியோஜாதமூர்த்தி. தீர்த்தபாலர் விநாயகக் கடவுள். ரிஷி பரத்துவாசர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணுவோர் தாம்பூலம் குதிரை இவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும். இந்தத்தீர்த்த ஸ்நானத்தால் எவ்விதநடுக்கங்களும் நீங்கும். திரிபுரத்து அசுரர்களால் மிகுந்த துன்பமுற்ற தேவர்கள் இந்தஸ்தலத்தையடைந்து

காருண்யாமிர்த முதலிய தீர்த்தங்களில் ஆடிப் பின்பு இந்த வருணதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி இதன்கரையிலிருந்து தவஞ்செய்தனர்; அப்போது ஸ்ரீ மகாலிங்கமூர்த்தி சத்தி யோஜாதமூர்த்தியா யெழுந்தருளிக் காட்சிகொடுத்து, "தேவர்காள்! சிறிதும் நடுக்கமடையவேண்டாம்" என்று அபயமளித்து, அம்முப்புரங்களையும் அப்பால் நகைத் தெரித்துத் தத்தம் பதவியை யடையும் வண்ணம் தேவர் களுக்கு அருள்புரிந்தனர். இந்தக்காரணத்தால் இதன் கரையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு நடுக்கந் தீர்த்தவரென்னும் திருநாமம் வழங்குகின்றது. இந்தத் தீர்த்தம் வருணனால் உண்டாக்கப் பட்டதாதலின் வருண தீர்த்தமென்று பெயர் பெற்றது.

(கச.) வாயுதீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற்கு வடக்கே ஓர் அம்புவீழ் தூரத்திலுள்ளது. இதன் தேவதை வாயு. தீர்த்தபாலர் முருகக்கடவுள். ரிஷி கண்ணுவர். விருக்ஷம் மகிழ். இதில் ஸ்நானம் பண்ணுவோர் கன்னிகா தானம், சத்திரதானம், சுவர்ணதானம் இவற்றைச் செய் தல் வேண்டும். இந்தத்தீர்த்த ஸ்நானத்தால், வாயு சம் பந்தமான நோய்கள்யாவும் நீங்கும். கிருகலனென்னும் ஒரு பிராமணன் தனது குலாசாரமுழுவதையும் விட்டொ ழிந்து பதிதன்பதிதனென்று எல்லாராலும் தள்ளப் பட்டான்; பின்பு வேடனாகப்பிறந்து இந்தஸ்தலத்தை யடைந்து இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினான்; அப்பால் மகாபரிசுத்தனாகிச் சிவபதமடைந்தான். இது வாயுவினால் உண்டாக்கப்பட்டதனால் வாயுதீர்த்தமென்று பெயர்பெற்றது.

(கரு.) குபேரதீர்த்தம்:—இது வாயு தீர்த்தத்திற்குக் கிழக்கே ஐந்து அம்புவீழெல்லையில் உள்ளது. இதன் தேவதை குபேரன். தீர்த்தபாலன் கண்டாகர்ணன். ரிஷி மார்க்கண்டேயர். விருக்ஷம் சண்பகம். இதில் ஸ்நானம் பண்ணுவோர் மோதகம், கரும்பு, சர்க்கரை, புஷ்பம், கோதுமை என்பவற்றைத் தானஞ்செய்தல்வேண்டும்.

குபேரன் இதை யுண்டாக்கி இதில் ஸ்நானம்பண்ணுவோர் எல்லாச்செல்வங்களையும் பெறுமாறு பரமசிவனிடத்து வரம் பெற்றான். இது குபேரனால் உண்டாக்கப்பட்டத னாற் குபேர தீர்த்தமென்று பெயர்பெற்றது.

(கசு.) ஈசானதீர்த்தம்:—இது குபேர தீர்த்தத்திற்குக் கிழக்கே இரண்டம்புவீழ் தூரத்தேயுள்ளது. இதற்குத் தேவதை ஸ்ரீசங்கரர். தீர்த்தபாலன் மாணிபத்திரன். ரிஷி வசிஷ்டர். விருக்ஷம் விளா. இதில் ஸ்நானம்பண்ணுவோர் ருத்ராக்ஷம், வஸ்திரம் இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இந்தத் தீர்த்த ஸ்நானம் நல்ல சந்தானத்தையும் சிவஞானத்தையும் அளிக்கும். மார்க்கண்டேயமுனிவர் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினமையால் சிவஞான முற்று யமவாதை யொழிந்து தீர்க்காயுளைப் பெற்றனர். ஈசானனால் உண்டாக்கப்பட்டமையின் ஈசான தீர்த்த மென்று இது பெயர்பெற்றது.

(கஎ.) கிருஷ்ணகூபம்:—இது திருக்கோயிலுள் ஈசான திக்கில் கிருஷ்ணனால் உண்டாக்கப்பட்டது. இதில் அஷ்டமிதிதியில் ஸ்நானம்பண்ணுதல் விசேஷம். இதனால் கடன்கொடாமை முதலியபாவம் நீங்கும்; எல்லா ஐசுவரியங்களையும் பெறலாம். வாமனமூர்த்திக்கு மூன்றடி மண் கொடுக்க உடன்பட்ட மகாபலியைக் கொடாதேயென்று அசுரகுருவாகிய சுக்கிராசாரியர் தடுத்தமையால் தமது கண்ணை இழந்தார். பிறகு இதில் ஸ்நானம்பண்ணிக் கண்ணைப் பெற்றுகொண்டனர். இது சிவபெருமானை அபிஷேகித்தற் பொருட்டுக் கிருஷ்ணனால் உண்டாக்கப் பட்டதனால் இப்பெயர்பெற்றது.

(கஅ.) கனக தீர்த்தம்:—இது மூலஸ்தானத்திற்கு வடமேற்கில் உள்ளது. பரமபதியாகிய சிவபெருமானது திருவிழிகளினின்றும் பெருகிய பொன்னிறமுள்ள கருணை வெள்ளம் தன்னிடத்துப் பாயப்பெற்றமையாற் கனக தீர்த்தமென்று பெயர்பெற்றது. இது காகத்திற்குப் பொன்னிறமருளி, உருத்திரவடிவம் அளித்தமையாற் காக

தீர்த்தமெனவும் பெயர் பெறும். ஒருவன் இதை நோக்கினும், தொட்டாலும், எவ்வகைப் பாவத்தினின்றும் நீங்குவான். சந்திரன் குருபத்தினியாகிய தாரையைப் புணர்ந்தமையால் தனக்குண்டான க்ஷயரோகத்தை இதிற் படிந்து மாற்றிக்கொண்டதுமன்றிப் பின்னும் சிவபெருமானுக்கு எட்டுத் திருமேனியில் ஒருதிருமேனியாகவும், இடக்கண்ணுகவும், முடியாகவும் விளங்கும் பேற்றையும் பெற்முன். துங்கபத்திராநதி தீரத்திலுள்ள சப்த கோடீசுவரமென்னும் ஓர் அக்கிரகாரத்தில், சிவாராதனத்திற் சிறிதும் வழுவாத பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் ஆராயாமல் புழுவெட்டுண்ட மலரைக்கொண்டு பூசித்ததனுல், இரண்டு கண்களையுமிழந்து வசிஷ்டமுனிவர் நியமனத்தால் இந்தஸ்தலத்தையடைந்து இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிக் கண்களைப் பெற்றனன். இவனே மதுரையில் விசுவாமித்திர முனிவனுகிப் பிரசித்தி பெற்றனன்.

(கக.) கங்கா கூபம்:—இது திருக்கோயிலுக்குள் மூலஸ்தானத்திற்கு வடகீழ்த்திக்கில் உள்ளது. இதன் வரலாறு முன்னே சொல்லப்பட்டது. இதைத் தொடுவோரும் புரோக்ஷணஞ்செய்து கொள்வோரும் எல்லாப் பாவங்களினின்றும் நீங்குவார்கள். இதில் ஸ்நானம் பண்ணுவோர் சிவலிங்கம், சிவிகை, ரதம், வெள்ளைக்குடை, சுவர்ணம் என்பவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இதற்குவடதிசையில் அர்த்தநாரீசுவரரும், அக்கினிதிக்கில் விபண்டக முனிவரும், கீழ்த்திசையில் பைரவரும், நிருதிதிக்கில் பிரமாவும் இதைக் காப்பவர்களாக எழுந்தருளியிருக்கின்றனர். இதன் மேற்கில் மருதவிருக்ஷம் விளங்குகின்றது. இதனது சமீபத்தில் பிதிர்களைக்குறித்து எந்த விசேஷ காலத்திலாயினும் தர்ப்பணஞ்செய்யின், ஒரு வருஷத்திலுள்ள பிதிர்தினங்களாகிய தொண்ணூற்றுறு தினங்களிலும் காசி க்ஷேத்திரத்திற் செய்ததாகப் பாவித்து அப்பிதிர்கள் சந்தோஷமடைவார்கள்.

(உ௦.) கருட தீர்த்தம்:—இது திருக்கோயிலுக்கு எதிரே சிறிது தூரத்தில் உள்ளது. கருடன் இதில் ஸ்நானஞ்செய்து பராக்கிரமம் பெற்றுத் தேவலோகத்திற் சென்று அங்குள்ள எல்லாத்தடைகளையும் அகற்றி அமிர் தங்கொணர்ந்து நாககணங்களுக்கு ஈந்து அந்நாககணங் களின் தாயாகிய கத்துருவுக்கு அடிமைப்பட்டிருந்த தனது தாயாகிய விநதையை அவ்வடிமைத் திறத்தினின்று மீட்டனன். இதனாலிது கருடதீர்த்தமென்னும் பெயர் பெற்றது.

(உக.) வசு தீர்த்தம்:—இது யமதீர்த்தத்திற்கு வட கீழ்த்திக்கில் உள்ளது. இதில் சுக்கிலபக்ஷத்தின் அஷ்டமி திதியில் ஸ்நானம்பண்ணுதல் விசேஷம். இது வசுக்களால் உண்டாக்கப்பட்டமையால் இப்பெயர் பெற்றது.

(உஉ.) சூரிய தீர்த்தம்:—இது வசுதீர்த்தத்திற்கு வடக்கேயுள்ளது. இதில் ஆதிவாரம் உதயகாலத்தில் ஸ்நானஞ்செய்தால் எல்லா நோய்களும் நீங்கும். இது சூரியனால் உண்டாக்கப்பட்டதனால் இப்பெயர் பெற்றது.

(உங.) மருத்துக்கள் தீர்த்தம்:—இது சூரியதீர்த்தத் திற்குப் பக்கத்தேயுள்ளது. இதனால் வாதநோய் நீங்கும். மருத்துக்கள் இதில் ஸ்நானம்பண்ணி, கர்ப்பவாசஞ்செய் யும்பொழுது இந்திரனால் அறுபட்ட தமது குறையுடல் வளரப்பெற்றார்கள். இதனால் இஃது இப்பெயர் பெற்றது.

(உச.) நரசிங்கதீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற் குத் தெற்கேயுள்ளது. இதில் நீராடுவதால் குஷ்டநோய் நீங்கும். இது நரசிங்கமூர்த்தியால் உண்டாக்கப்பட்ட மையின் இப்பெயர் பெற்றது.

(உரு.) நந்தி தீர்த்தம்:—இது வருணதீர்த்தத்திற்குக் கிழக்கேயுள்ளது. இதில் ஸ்நானம்பண்ணுவோர் சிவஞான மடைவர். இது திருநந்திதேவராலுண்டாக்கப்பட்டமை யால் இப்பெயர் பெற்றது.

(உசா.) துரோணதீர்த்தம்:—இது வருணதீர்த்தத் திற்கு மேற்கேயுள்ளது. இதில் துரோணசாரியர் ஸ்நா

னம்பண்ணி அசுவத்தாமா என்னும் புத்திரனைப்பெற்றார். இதனால் இஃது இப்பெயர்பெற்றது.

(உஎ.) இராகவகூபம் :—இஃது அம்பிகையின் சன்னிதியில் உள்ளது. இராவணனைக்கொல்லுதற்குச் செல்லும்பொழுது, இந்த ஸ்தலத்தையடைந்த இராகவனால் உண்டாக்கப்பட்டதாதலின் இஃது இப்பெயர்பெற்றது. இதில் ஸ்நானம் பண்ணுவோர்க்குச்சத்துருபயம் நீங்கும்.

(உஅ.) சுரதீர்த்தம் :—இது வருணதீர்த்தத்திற்கு வடக்கே பதினெட்டு அம்புவீழெல்லையில் உள்ளது. இது தேவர்களால் உண்டாக்கப்பட்டதனால் இப்பெயர் பெற்றது. இது சிவப்பேற்றை அளிக்கும்.

(உகூ.) முனிதீர்த்தம்:—மூலஸ்தானத்திற்குத்தெற்கேயுள்ளது. இதில் ஸ்நானம்பண்ணுவோர் சிவ கிருபைக்கு உரியராவர்.

(௩௦.) கச்சபதீர்த்தம் :—இஃது இந்த ஸ்தலத்திற்கு உத்தரதிசையிலுள்ள மகாமகிமைபொருந்திய காவிரிமாநதியின் வடபுறத்துள்ள ஒருதுறை. இதற்குத்தேவதை வாமதேவர். தீர்த்தபாலர் வீரபத்திரர். ரிஷி கச்சபர். விருக்ஷம் மா. இதில் ஸ்நானஞ்செய்வோர் எள்ளன்னம், சிவிகை, தானியங்கள் இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். இதில் ஸ்நானம்பண்ணுவோர் மறுமையில் அரசராவர். கச்சபமுனிவர் நாள்தோறும் இதில் ஸ்நானம் பண்ணிப் பெருந்தவஞ் செய்து, ஸ்ரீமகாலிங்கப்பெருமான் வாமதேவமூர்த்தியாயெழுந்தருளிக் காட்சிகொடுக்கத் தரிசித்து, " எம்பெருமானே ! இந்தத்திருவுருவத்தோடு இவ்விடத்தே எக்காலத்தும் எழுந்தருளியிருத்தல்வேண்டும் " என்றுபிரார்த்தித்தார். பரமசிவன் அவ்வாறே எழுந்தருளி இருக்கின்றனர். அம்மூர்த்தியைத் தரிசித்துப் பேறுபெற்றவர் அநேகர். கச்சபமுனிவர் தவம்புரிந்து பேறுபெற்றமையால் இது கச்சப தீர்த்தமென்று பெயர்பெற்றது.

(௩க.) கௌதமதீர்த்தம் :—இது கச்சபதீர்த்தத்திற்கு மேற்கே ஓரம்புவீழ் தூரத்தில் உள்ளது. தீர்த்தபாலர்

000025

சண்டேசுரர். ரிஷி கௌதமர். இதில் ஸ்நானம்பண்ணுவோர் பூமி, கறவைப்பசு இவற்றைத் தானஞ்செய்தல் வேண்டும். அகல்யை இந்திரசம்பந்தத்தால் தனக்கு நேர்ந்த தோஷத்தை இதில் ஸ்நானம்பண்ணி நீக்கிப் புனிதையானாள்.

(௩௨.) கல்யாணதீர்த்தம் :—இது காவிரியின் தென் புறத்தே, மூன்றம்புவீழ் அகலங் கிழக்குமேற்கெல்லை யுள்ள ஒருதுறை. இதன் தேவதை மத்தியார்ச்சுனேசுவரர். தீர்த்தபாலர் திருநந்திதேவர். ரிஷி உரோமசர். விருக்ஷம் அரசு. இதில் ஸ்நானம்பண்ணுவோர் பசு, பொன் முதலியவற்றை அந்தணர்களுக்குத் தானஞ்செய்தல் வேண்டும். இஃது எல்லாத் தீர்த்தங்களிலும் உத்தமமாகச் சொல்லப்படுகிறது.

இந்தஸ்தலத்தில் காசிபர்முதலிய முனிவர்களுக்குச் சிவதத்துவத்தை யுபதேசித்த ஸ்ரீ அகஸ்திய மகாமுனிவருடைய பூர்வப்பிரார்த்தனையை நிறைவேற்றுதற்கு ஏக நாயகராகிய பரமசிவன் திருவுளங்கொண்டிருப்பதை உமாதேவியார் அறிந்து, இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி விதிப்படியே பூரகர்மா,ஆதிசக்திபூசை இவற்றைச் செய்து அவரை விவாகஞ்செய்துகொண்டார். அகஸ்திய முனிவர் அத்திருமணக்கோலத்தைத் தரிசித்துப் பேரானந்தப்பெருவாழ்வடைந்தனர். இதனால் இது கல்யாணதீர்த்தமென்று பெயர்பெற்றது.

ஆகாயத்தில் விமானத்தில் எழுந்தருளிய நித்யகல்யாணரூபிகளாகிய பார்வதிபரமேசுவரர்கள் இந்தமஹாநதியினுடைய இரண்டு தீரங்களிலும், ஐந்துயோசனை அளவாக இருந்து தவஞ்செய்யும் முனிகணங்களின் சிரத்தா பக்திகளையும், தவச்செயல்களையுங்கண்டு மகிழ்வுறுகையில், அவர்கள் திருவிழிகள் பொழிந்த ஆனந்த பாஷ்பம் இவ்விடத்தே வீழ்ந்தமையால், முன்னரே கல்யாணவடிவினதாகிய காவேரியிலுள்ள இந்தத்துறை கலியாண தீர்த்தமென்று பெயர்பெற்றதென்று கூறுவது

முண்டு. இதையல்லாமல் தன்னிடத்து ஸ்நானம் பண்ணி னோர் எல்லா மங்களங்களையும், முக்தியின்பத்தையும் எளிதினடையச் செய்தலாலும் இது கலியாண தீர்த்த மென்று சொல்லப்படும். இதில் விதிப்படி ஸ்நானம் பண்ணிக் கரையிலிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜபம்பண்ணு வோர் சிவசாயுஜ்யத்தை யடைவர். கின்னரர்முதலியதேவ கணத்தினர் யாவரும் தினந்தோறும் இதில் ஸ்நானம் பண்ணித் தத்தம் நியமங்களை முடித்துச் சிவார்ச்சனை செய்து எப்பொழுதும் மகிழ்ச்சியோடிருப்பர். இதில் ஸ்நானம்பண்ணுதற்கு எல்லாக்காலமும் உரியனவாயி னும் சோமவாரம் விசேஷம்; அதிலும் ஆதிவாரம் விசே ஷம்; அதிலும் அமாவாசை விசேஷம்; அதிலும் சூரியோ பராகம் சந்திரோபராகம் மகாவிசேஷமாம். எல்லாவற்றி லும் மிகச்சிறந்தது தைப்பூசம். அதிலும், குருவாரத்தோடு கூடிய புஷ்யநாள் மிகவும் விசேஷம். இந்தக்குரு புஷ்ய தினத்தில், கங்கைமுதலிய எல்லாப் புண்ணியதீர்த்தங் களும் இதில்வாசம் பண்ணுகின்றன. இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணினால் கோடிஜன்மங்களிற்செய்த பாவம் நீங்கும். இந்தக்காரணத்தால், இக்கலியாணதீர்த்தத்திற் குப் புஷ்யதீர்த்தமென்றும் ஒரு பெயருண்டு. இதில் ஸ்நானம்பண்ணிப் பேறுபெற்றோர் பலர். அவருட்சிலர் சரித்திரம் வருமாறு:

(i) மகாபரிசுத்தனாகிய பரிட்சித்து மஹாராஜனைக் கடித்துக்கொன்றமையால் கார்க்கோடகன் தனக்குண்டா கிய தோஷத்தை இதில் ஸ்நானம்பண்ணி நீக்கி உய்ந் தனன்;

(ii) கலிபுருஷனால் அளவற்ற துன்பமுற்ற நளமகா ராஜன் இதில் ஸ்நானம்பண்ணிப் பின்பு தன்மனைவியை யும், மக்களையும், தேசத்தையுமடைந்து வாழ்ந்தனன்;

(iii) தம்மைக்கண்டு சூதமுனிவர் எழவில்லையென்று பலராமர் சினந்து அவரைக்கொன்ற தோஷத்தை இந்தத் தீர்த்தஸ்நானத்தாற் போக்கினர்;

(iv) தைப்பூசத்தில் இதிற்படிந்தமையாலே பகீரதன் பெறுதற்கரிய ஆகாயகங்கையைப் பூமியில் வருவித்துத் தன் முன்னோரை நற்கதியடைவித்தனன்;

(v) மிகக்கொடியோனாகிய ஒருவன் சிவராத்திரி புண்ணிய காலத்தில் இதில் முழுகித் திருக்கோயிலிற்சென்று சிவத்திரவியத்தை அபகரித்துக் கொண்டு வெளியே வந்த பொழுது மரணமடைந்தான். உடனே அவனைக் கிங்கரர்கள் யமனிடம் கொண்டு போய்விட யமன் அவனைநோக்கி, "நீ சிவராத்திரியில், கல்யாண தீர்த்தத்தில் முழுகினதால், எமது தண்டனைக்குரியாயல்லை. கைலையங்கிரிக்குச் செல்வாயாக" என்று விட்டு விட்டனன்;

(vi) விதேகநாட்டிலே, காபிலமென்னும் ஊரிலுள்ள ஒரு பிராமணன் சில ஸ்திரீகளையும் சிலபாலர்களையும் கொன்று சம்பாதித்த ஆபரணங்களைக் கொண்டு ஐந்து ஸ்திரீகளை விவாகஞ் செய்துகொண்டான். அவனது பாவ மிகுதியால்அந்த ஐவரும் இறந்தபின்பு கள்விற்போர்குலத்தினளாகிய ஒருத்தியைச் சேர்ந்திருந்தான். ஒரு குழந்தையைப்பெற்று அவளுமிறக்க, 'இதுவன்றோ இவள் மரணத்திற்குக்காரணமாயிற்று' என்று அக்குழந்தையைக்கிழித்து ஆற்றில் விட்டனன். பின்பு அப்பாவங்களாற் பைத்தியங் கொண்டு முயலகன் (வலிப்பு) முதலிய கொடிய வியாதிகளையடைந்து, எல்லாராலுமிழிவுபடுத்தப்பட்டு மிகவும் துன்புற்று ஒருநாள் தற்செயலாய் இத்தலத்தையடைந்து வீதியில் நோயினால் வசமற்றுக்கிடந்தனன். அன்றைத்தினம் தைப்பூசமாதலால், புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணிவருவோர்களுள்ளே சில பிராமணர் இவனைக் கண்டு இரங்கி எடுத்தபொழுது அவர்கள் கையீரம்பட்டதனால் இவன் பித்த மயக்கமற்று உணர்ச்சியுற்று அவர்களை வணங்கிச்சென்று புஷ்ய தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணிப் பரிசுத்தனாகி மருதவாணரைத் தரிசித்துக்கொண்டு சிலநாளிருந்து முத்திபெற்றனன்.

(௩௩.) சேஷதீர்த்தம்:—இது காவிரியின் தென்புறத்துள்ள ஒரு துறை. ஆதிசேஷன் ஒருகாலத்தில் இந்தப் பூமியைத் தாங்கும்வன்மை இல்லாதவனுகி மெலிந்து இந்த ஸ்தலத்தை யடைந்து இத்துறையிற் படிந்து வன்மை பெற்று மகிழ்ச்சியுற்றுச் சென்ருன். இதனுல் இஃது இப் பெயர் பெற்றது.

(௩௪.) கந்ததீர்த்தம்:— இது சேஷதீர்த்தத்திற்குக் கிழக்கேயுள்ளது. தேவகண்டகனுகிய சூரபன்மாவை வதஞ்செய்தற்பொருட்டு வீரபாகுதேவர் முதலிய தம்பிமாரோடும், லக்ஷம் வீரரோடும், இரண்டாயிரவெள்ளம் பூதகணங்களோடும், தேவர்களோடும் எழுந்தருளிய குமாரக்கடவுள் இதில் ஸ்நானம்பண்ணி மருதவனேசரைத் தரிசித்து அருள்பெற்று வீரமகேந்திரமடைந்து வெற்றிபெற்றனர். இதனுல் இத்துறை கந்ததீர்த்தமென்று பெயர்பெற்றது.

(௩௫.) ஐராவததீர்த்தம்:—இது காவிரியின் தென், புறத்துள்ள ஒருதுறை. ஐராவதம் இத்துறையிற்படிந்து துர்வாசமுனிவர் சாபத்தால் தனக்குண்டாகிய காட்டானை வடிவம் நீங்கப்பெற்றது. இதனுல் இத்துறை ஐராவத தீர்த்தமென்று பெயர்பெற்றது. இதற்குமுன்னமே இது விநாயகதீர்த்தமென்று வழங்கப்படும்.

வரகுணபாண்டியர் வழிபட்டது

பாண்டி நாட்டிலே மதுராபுரியில் வைதிகநெறியும் சைவநெறியும் தழைத்தோங்க அரசியற்றிய வரகுண பாண்டியர் ஒருநாள் காட்டிற்சென்று வேட்டையாடி விரைந்து திரும்பிவருகையில் சூரியாஸ்தமனமாயிற்று. அப்போது வழியில் அயர்ந்துகிடந்த ஒரு பிராமணன் அவரேறிய குதிரையினுல் மிதிக்கப்பட்டு இறந்தான். அரசர் அதனை அறியாது தமது நகரத்தையடைந்தார். பிரமஹத்தி அவரைப்பற்றி மிகவும் வருத்தியது. அதனுல் அவர் மனம் நொந்து பல தான தருமங்களைச் செய்து

வந்தார். ஒன்றினாலும் அது தீரவில்லை. பின்பு தமது குலதெய்வமாகிய சோமசுந்தரமூர்த்தியைப் பிரார்த்தித்து வந்தார். ஒருநாள் சிவபெருமானுடைய திருவருளினாலே, "வரகுண! இன்னுஞ்சிலநாளில், நீ மத்தியார்ச்சுனம் அடைவை; அப்பொழுது இது தீரும். கவலைப்படவேண்டாம்" என்று ஆகாயத்தில் ஓர் அசரீரி யுண்டாயிற்று. மன்னர்அது கேட்டு மகிழ்ச்சியுற்றிருந்தனர். சிலநாட்களுக்குப்பின் சோழராஜன் யுத்தஞ்செய்தற்குவர, அரசர் அவனோடு யுத்தஞ்செய்து அவனைத் துரத்திக்கொண்டேவந்து இந்த ஸ்தலத்தையடைந்தார். அடைந்ததினம் குருபுஷ்யமாதலால் மிகவும் மகிழ்வுற்று விதிப்படி புஷ்யதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி அளவிறந்த தானங்களை அந்தணர்க்களித்தார்; பின்பு காருண்யாமிர்தத்திலும் ஸ்நானம்பண்ணித் திருக்கோயிலுக்குள்ளே செல்லுகையில் அப்பிரமஹத்தி நடுநடுங்கி வெளியே நின்றுவிட்டது. அரசர் மகிழ்ந்து விதிப்படி சுவாமியையும் அம்பிகையையும் தரிசித்து இந்தஸ்தலத்திலே என்றும் வசித்தல்வேண்டுமென்னும் குறிப்புடையவராகிச் சிவபெருமான் கட்டளைப்படி மேலைவாயில் வழியேசென்று திருவீதியில் ஒருபக்கத்தில் ஒருமாளிகை கட்டுவித்துக் காலந்தோறுஞ்சென்று சுவாமி தரிசனத்தோடு நூறு அசுவமேதப் பிரதக்ஷிணமும் செய்துகொண்டு அம்மாளிகையில்தங்கி அரசியற்றுவாராயினர்; பின்பு மேலைக்கோபுரத்தைத் தம்பெயராற் கட்டுவித்துத் திருக்கோயிலுக்கு வடக்கே சோமசுந்தரக் கடவுளுக்கு ஓராலயம் இயற்றுவித்து இன்னும் பற்பலபணிகள் செய்துவந்தார்.

இப்படி யிருக்க ஒருதினஞ்சென்று நமஸ்காரஞ் செய்யும்பொழுது மருதவாணர், "வரகுண! கைலையங்கிரியின் கொடுமுடியையொப்ப ஒருமதில் கட்டுவித்து அதனை வலஞ்செய்க; அதைச் செய்யுமொரு பிரதக்ஷிணம் ஆயிரம் பிரதக்ஷிணத்திற்கு ஒப்பாகும். நமக்கு மிகவுவப்பாம்" என்றருளக்கேட்டு அரசர் அவ்வாறே புரிவித்து வலம்வருவாராயினர்.

பின்னொருநாள், கொடிய கள்வனொருவனைச் சிரச் சேதஞ்செய்தற்பொருட்டுக் காவற்காரர்கள் இறுகக் கட்டிக்கொண்டு செல்லுகையில், அவன்நெற்றியில் திரு நீறு விளங்குவதைக்கண்டு கட்டை அவிழ்த்துவிடுவித்து, அவனுக்கு வேண்டும் பொருளை அளித்து நயமொழி புகன்று விடுத்தனர்.

வேறொருநாள், இரவிலே நரிகள் ஊளையிடுதலைக் கேட்டு இவைகள் ஆலவாயானை அழைக்கின்றனவென்று மனமுருகிப் பிடித்து வருவித்து நல்லவஸ்திரங்களால் அவற்றைப் போர்த்து விடுத்தனர்.

மற்றொருநாள் ஒருதடாகத்தில் தவளைகள் சப்தித் தலைக்கேட்டு, "இவைகள், ஹரஹர என்று சப்திக்கின் றன" என்று கருதி இரத்தினங்களையும் பொன்களையும் அத்தடாகத்தில் வாரியிறைத்தனர்.

ஒருநாள் திருமஞ்சன தைலத்திற்காக உலர்த்திய எள்ளைக் கோயில் வேலைக்காரனொருவன் எடுத்து உண்டு தைக் கண்டு, "நீ இதை உண்ணலாமோ" என்றனர். அவன், 'எள்ளுண்ட கடனைத் தீர்க்கவேண்டும்' என்னும் பழமொழிப்படி "மருதவாணர்க்கு மறுபிறப்பிலும் அடி மையாய் வருதற்பொருட்டு உண்கின்றேன்" என்ன, "அப்படியாயின், எனக்கும் இதிற் சிறிதுகொடு" என்று சொல்லி அவன் எச்சிலெள்ளை வாங்கியுண்டனர்.

அப்பால் ஒருநாள், தலையோடொன்று இந்த க்ஷேத் திர எல்லையிற் கிடத்தலைக்கண்டு மனமுருகி அதனைத் தமது மலர்க்கரத்தாலெடுத்துக் கண்ணீர் வெள்ளத் தாலாட்டி, "உம்மைப்போல் தமியேனும் இந்த ஸ்தலத் தெல்லையில் என்தலைகிடக்கப்பெறுவேனோ" என்று மன முருகினர்.

பின்னொருநாள், திருக்கோயிலின்முன்னே நாய்மலம் கிடத்தலைக்கண்டு "இதையெடுப்பவருக்கு என்தேசத்திற் காற்பங்கு கொடுப்பேன்" என்று எண்ணி முதற்பிர தக்ஷிணமும், அஃது எடுக்கப்படாமையால் "அரைப்

பங்கு கொடுப்பேன்" என்று இரண்டாம் பிரதக்ஷிண மும், "முக்காற்பங்கு கொடுப்பேன்" என்று மூன்றும் பிரதக்ஷிணமும், "முழுமையுங் கொடுப்பேன்" என்று நான்காம் பிரதக்ஷிணமும் செய்தார். அதுவோ எடுக்கப் படவில்லை. அதுகண்ட அரசர் "என் தேசம் எனக்கே யுரியது" என்று சொல்லி அதைத்தமது திருக்கரத்தினுல் எடுத்துப் புறத்தே எறிந்தார்.

வேறொரு நாள், திருவீதிப்பிரதக்ஷிணஞ் செய்யும் பொழுது பழுத்தவேப்பமரங்கள் வெயிலில் நிற்றலைக் கண்டு, "அந்தோ! சிவலிங்கத்தையொத்த திருவுருவங்கள் பலவற்றைத் தாங்கிய இவைகள் வெதும்புகின்றனவே" என்று இரங்கி அம்மரங்களுக்கெல்லாம் மேற்கட்டி கட்டு வித்தனர்.

பின்னர் ஒருநாள், தாம் விவாகஞ்செய்துகொண்ட சோழராஜன் புத்திரியை இரவில் அந்தப்புரத்திற்கண்டு, "இவள் எம்பெருமானுக்கேயுரியள்" என்று நினைந்து உடனே ஒருவரும் அறியாவண்ணம் அழைத்துக்கொண்டு ஆலயத்தையடைந்து திருமுன்நின்று, "மருதவாணு! இப் பெண்மணியை அங்கீகரித்தருள்க" என்று பிரார்த்தித் துக் கதவைத்தட்டி அழைக்கவே சிவபெருமான் கதவைத் திறந்து, "வரகுணு! வருக" என்றழைத்தார். அப்போது பாண்டியர், "ஸ்வாமீ! இப்பெண்மணியை யங்கீகரித் தருள்க" என்று பிரார்த்திக்க, எம்பெருமான் வலக்கை மாத்திரம் வெளியேதெரிய அப்பெண்மணியைஉட்கொண் டருளினுர். அரசர் அதுகண்டு, "இந்தக் கை மாத்திரம் எளியேனுல் தீண்டப்பட்டதென்றோ நீக்கியருளினீர்" என்று மனந்தளரவே சிவபிரான், "உனது அன்பை உல கத்தார் அறியும்படி இக்கையை நாளை அங்கீகரிப்போம்" என்று கட்டளையிடுதலும் அரசர் மகிழ்ந்துவெளியே வந் தார். திறக்கப்பட்ட கதவுகள் முன்போலவே மூடப்பட் டிருந்தன. அரசரையும் தேவியையும் மனையிலுள்ளோர் தேடிப்பின்பு அரசரைமட்டுங்கண்டு, 'தேவியார் எங்கே?'

என்று வினவ அவர், "மகாலிங்க மூர்த்தியினிடத்தி லிருக்கிறூர்" என்றூர். அவர்கள் ஆச்சரியமடைந்து பூசிப் பவர்களோடு உள்ளேபுகுந்து மகாலிங்கப்பெருமான் முடி மீது கை விளங்குதலேக்கண்டார்கள். சிவபிரான் உடனே அக்கையை உள்ளே வாங்கியருளினர். அதுகண்ட அரசர் மகிழ்ச்சியடைய, மற்றவர்கள் அச்சமும் அதிசயமும் அடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரிபெய்தார்கள்.

இவ்வாறு வரகுணர் பலநாள் இந்நகரில் வசித்துக் கொண்டிருந்து மருதவாணர் கட்டளேயின்படி தமது மதுராபுரியையடைந்து சோமசுந்தரமூர்த்தி சிவலோகங் காட்டியருளத் தரிசித்துப் பலநாளரசாட்சி செய்து சிவபத மடைந்தனர்.

ஹம்ஸத்துவசன் பேறுபெற்றது

சோழநாட்டிலே உறையூரிலே நற்குணநற்செய்கை இயல்பாகவே அமைந்து அரசாண்ட ஹம்ஸத்துவசச் சோழனென்னும் ஒருவன் இருந்தான். அவன் கங்காஸ்நா னம் பண்ணும் விருப்பங்கொண்டான். தான் சென்று படிந்து வரக்கூடாமையை நினேந்து வருந்தி, தனக்கு மித்திரனுகிய பிராமணனெருவனேயழைத்து, "நீர் என் பொருட்டுச்சென்று கங்கா ஸ்நானம்பண்ணி, அப்பலனே எனக்குத் தருக" என்று பிரார்த்தித்தனன். அந்தப்பிரா மணன், "எனதுமனேவி இளேயளாதலாலும், வேறுதுணே யில்லாமையாலும் நான் செல்லுதற்கு இயலாது" என்ற னன். அரசன், "உமது மனேவியை நான்பாதுகாப்பேன்; நீர் கவலே யடையவேண்டாம்" என்று உறுதிமொழி கூறிப்போகச் செய்து தான், சொன்னபடியே அவன் மனேவியைப் பாதுகாத்து வந்தனன். காசிக்குச்சென்ற அந் தணன் கங்காஸ்நானஞ்செய்து காவடிதாங்கி உறையூரை யடைந்து மறுநாட்காலேயில் அரசனேக் காணலாமென்று எண்ணி அன்றிரவில் தன்மனேக்குச்சென்று காசிக்குப் போய் வந்தவரலாறுகளே மனேவிக்குக்கூறிக்கொண்டிருந்

தான். இங்கே இப்படியிருக்க, முன்போலவே பாதுகாத்தற் பொருட்டு இவ்வந்தணன் வீட்டின்புறம்பேவந்த அரசன், 'இவ்வீட்டிற்குள் ஆடவர் சப்தம் ஏது?' என்று ஐயுற்று, அன்னியனொருவன் வந்துள்ளானென்று துணிந்து கடுங் கோபங்கொண்டு சுவரேறி வீட்டினுள்ளே சென்று தனது கையிலிருந்த வாளாயுதத்தால் அவனைக்கொன்று பின்பு மித்திரனென்றறிந்து வருந்தினன். பிரமஹத்தி அவனைப்பற்றியது. அப்பால் அரசன் அதனால் அளவில் லாததுன்பமுற்று, அதனைப் போக்குதற்கு யாதொருவழி யுங்காணது தடுமாறிச் சில பெரியோருடைய கட்டளை யின்படி ஸ்தலயாத்திரை செய்துகொண்டே வந்தான். அப்படிவரும் பொழுது இந்த ஸ்தலத்தையடைந்து வருண தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி அங்குள்ள ஸ்ரீ கம்பகரேச ரால் தனது நடுக்கம் முற்றும் ஒழிந்து, பின்பு புஷ்ய தீர்த்தத்திலும் காருண்யாமிர்தத்திலும் ஸ்நானம்பண்ணிக் கீழைக் கோபுரவாயில் வழியாகத் திருக்கோயிலுக்குள்ளே செல்லுகையில் பிரமஹத்தி கோபுரத்திற்கு வெளியே நின்றுவிட்டது. பின்பு அரசன் உவப்புற்றுச் சுவாமி தரிசனஞ்செய்து பலபணிகள் இயற்றிப் பலவரங்கள் பெற்றுத் தன்னகரை அடைந்து வாழ்வுற்றான்.

வீரசேனன் பேறுபெற்றது

தாம்பிரபர்ணி தீரத்திலுள்ள ஒருநகரின் அரசனாகிய வீரசேனனென்பவன் வேட்டையாடும்பொழுது மிருகத் தைக் குறித்து எய்தபாணங்களுள் ஒன்று குறிதப்பிச் சென்று ஒரு பிராமணனைக் கொன்றது. பின்பு அரசன் பிரமஹத்தியாற் பிடியுண்டு வருந்தி இந்தஸ்தலத்தை அடைந்து புஷ்யதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணித் திருக் கோயிலுக்குள்ளே செல்லுகையில் பிரமஹத்தி நீங்கி முன்னவற்றோடு கூடியது. பின்பு அரசன் சுவாமி தரிசனஞ்செய்து தனது நகரத்தையடைந்தான்.

சித்திரகீர்த்தி பாண்டியன் மகப்பேறுற்றது

பாண்டிநாட்டிலே மதுராபுரியில் முன்னம் அரசாண்ட சித்திரகீர்த்தி பாண்டியன் என்பவன் புத்திரனில்லாமையால் மனம் வருந்தினன். சாபாலி முனிவரால் தனது முற்பிறப்பின் வரலாற்றையறிந்து அவரால் ஏவப்பட்டு அவன் இந்தஸ்தலத்தை அடைந்து காருண்யாமிர்தத்திலும் புஷ்ய தீர்த்தத்திலும் ஸ்நானம் பண்ணி மருதவனேசரைத் தரிசித்துச் சில நாளில் நல்லபுத்திரனைப் பெற்றான்; பின்பு பலநாள் இந்த ஸ்தலத்தில் வசித்துக் கொண்டேயிருந்து மருதவாணர்க்குப் பங்குனித்திருவிழாச் செய்வித்துத் தன்னகரை அடைந்தான்.

இன்னும் ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் ஒருகாலத்தில் பொதியிலிருந்த உலர்ந்தமீன்கள் உயிர்பெற்றுத்துள்ளித் தடாகத்திற் குதிக்கும்படி யருளினர்; செங்கல்லைப் பொன்னாக்கினர்; தனக்குப்புத்திரனில்லாமையால் பொற்பிரதிமையொன்று செய்வித்து அதனைப் புத்திரனாகப் பாவித்துப் பாராட்டிக்கொண்டிருந்த ஒரு சோழன் பிரார்த்திப்ப அப்பிரதிமைக்கு உயிரளித்து, உயிர்பெற்ற அப்பொன்னுருவச் சோழனுக்கு உடனே முக்தியளித்து அச்சோழனுக்கு மகப்பேறளித்தார். ஒரு சிவயோகியினுடைய ஆகாரசேஷம் புசித்துவந்த நாயொன்றைப் பூர்வ ஞானத்தோடு அரச கன்னிகையாகப் பிறக்கும்படி செய்து முக்தியளித்தார். தமது குரு மரணகாலத்தில் தரையிலெழுதிய மஹா வாக்கியத்தை ஒரு கழைக்கூத்தப்பெண் ஓலையிலெழுதிக் காதிற்போட்டுக் கொள்ள, அதனைப் பெறுதற்பொருட்டு அவளுக்குப் பலநாள் அடிமைவேலை செய்து, அதனைப்பெற்ற திரியம்பகரென்னும் ஒருவேதியர் பெருமான் இந்தப் புஷ்யதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணத் தொடங்கியபொழுது வேதியர்கள், "ஸ்வாமீ! இவர் தைப்பூசமாடல் தகுமோ" என்று வினவ, "திரியம்பகன் தைப்பூசமாடல் தகும் தகும் தகும்" என்று மூன்றுமுறை

மொழிந்தனர். மருதவாணரது திருவிளையாடல்கள் இன்னும் பலவுள்ளன.

பிரதக்ஷிணமகிமை

க-வது அசுவமேதப்பிரதக்ஷிணம். இது திருக்கோயிலினது வெளிமதிலினுள்ளாக வலம்வருதலாம். இதன் மகிமைகளைப் பின்வரும் பாடல்களால் அறிக :

(எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்)

அதினுற் றிசைவலம் வருவோர் பெறுவர்க ளணிநீ
டிலகிடு முயர்செல்வம், மதிநன் குறுவர்கண் மகவுற் றிடு
வர்கண் மருவார் தமைவென் றிடுவார்கள், சதிர்பெற் றிடு
வர்கள் பிணியற் றிடுவர்கள் சகமெச் சுறுவர்க ளிவை
யன்றிப், பதமொன் றவணுறு மதனுக் கியல்புறு பரிமே
தப்பல னடைவார்கள். (க)

மகரா லயம்வளை தருமிப் புவிதனை வலம்வந் திடி
னுறு வதுமெய்தும், புகழ்வா ரணமுக விறைவே லவன்
மறை புகல்வோ ரநுமதி முனமெய்தி, மிகுமா தரவொடு
செயினெய் திடுபயன் விரைவெய் திடும்வெங் கொலை
யாதி, இகழ்பா தகவினை யவர்செய் தனவுள யாவுந் தெரு
மர லுடனேகும். (உ)

வருநா ளொருமண் டலமரை மண்டல மருவொரு
கான்மண் டலவெல்லை, ஒருநா லிருபதின் மேலா றிரு
தொகை யோரே ழெனுமூன் றினுளொன்று, கருதா வவ
ரவர் வன்மைக் கிசைதரு கணிதம் பெறவந் திடல்வேண்
டும், ஒருவா றதில்வல னுற்றோர் களைவந் துழிவந் துழி
யறை கிற்பாமால். (ஙு)

கையா மிணைமலர் குவியா மனமொடு கருணைத் திரு
முக மலர்வெய்த, மெய்யா லொருவலஞ் செய்வா ரத
னிடை வினைநீத் துளமெண் ணியவெய்திப், பையா டர
வணி யெம்மா னுறைதரு பதியுற் றுறைவர்கண் மகிழ்
வோடு, தையா மதியினில் விழவிற் புரிதரு தகையோர்
பெறுபலன் புகல்வார்யார். (ச)

இந்தப் பிரதக்ஷிணஞ்செய்து பேறுபெற்ருேருள்ளே சிலர் சரித்திரம் வருமாறு :—

(க.) சூரியகுலத் தரசனுகிய யுவனுசுவன் மகப்பேறு கருதித் தனது குருவாகிய வசிஷ்ட முனிவரோடு இந்த ஸ்தலத்தையடைந்து புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து தன்மனைவிக்குக் கருப்பமுண்டாதற்பொருட்டு அம்முனிவர் மந்திரித்துவைத்த தீர்த்தத்தைத் தாக மிகுதியால் அறியாமற் குடித்துக் கருப்பமடைந்து கருப்பசிசு வயிற்றைக்கிழித்துக்கொண்டு வெளிப்பட்டமையால் மூர்ச்சையடைந்து விழுந்து, ஆயுள் வேதியர்கள் கிழிந்த அவ்வயிற்றைப் பொருத்தித் தைத்துப் பலமருந்துகளைக்கொடுக்க மூர்ச்சைதெளிந்து, அவ்வயிற்றுப்புண் ஒன்ருலும் தீராமையால் இந்த அசுவமேதப் பிரதக்ஷிணஞ்செய்து, புண் ஆறப்பெற்றுப் பின்பு வசிஷ்டமுனிவரோடும், குழந்தையோடும் மற்றவர்களோடும் தனது நகரடைந்து இன்புற்றிருந்தான்.

(உ.) மேற்கூறிய யுவனுசுவனுடைய வயிற்றைக் கிழித்து வெளிப்பட்ட மாந்தாதா, தனக்குத்திறை கொடாத கலிங்கதேசத்தரசனேடு போர்செய்து புறங்கொடுத்தோடிய அவ்வரசனைக்கொன்று பழியடைந்து சோர்வுற்று வசிஷ்டமுனிவரால் அறிவுறுத்தப்பட்டு இந்தப் பிரதக்ஷிணஞ்செய்து மருதவாணர்க்கு வஸந்த மஹோத்ஸவத் திருக்கல்யாணம் புரிவித்து, விளைநில முதலியவற்றை ஈந்து, சிவபெருமான் ஆகாசவாணியால், "அரசனே! உனதுபாவம் நீங்கியது. நீ நகரமடைந்து அரசுபுரிக; பின்பு நமதுலகடைக" என்று கூறியருளக் கேட்டுத் தனது நகரை அடைந்து, பலநாள் அரசாண்டு சிவாஞ்ஞையின்படி சிவலோகமடைந்து பேரின்பமுற்ருன்.

(ங.) தொண்டைநாட்டிலே ஸ்ரீ காஞ்சீபுரத்திலே, முன்னே அரசாண்டுவந்த வசுமானென்னும் ஓர் அரசன் கங்காஸ்நானத்திற்குச் சென்றனன். அப்பொழுது அவனது நாட்டைப் பகைவர் அபகரித்துக் கொண்டனர்.

அரசன் கேட்டுக் கவலையுற்றுச் சாபாலிமுனிவரை யடைந்து தனது குறையைக்கூறினன். அம்முனிவர், "அசுவமேதஞ்செய்" என்றுகூற அரசன், "பொருளில் லாமையால் என்னாலியலாது" என்றனன். பின்பு அம் முனிவர், "திருவிடை மருதூரை யடைந்து, அசுவமேதப் பிரதக்ஷிணஞ் செய்வாய்" என்றனர். அரசன் அப்படியே இத்தலத்தை அடைந்து சிவபிரானைவணங்கி விதிப்படி இந்தப் பிரதக்ஷிணஞ்செய்து பராக்கிரமமுடையவனாகிப் பகைவரை வென்று அவர் நாட்டைக்கவர்ந்து அதனை மருதவனேசருக்கு அர்ப்பணஞ்செய்து மார்கழிமாதத்து உத்ஸவமும் நன்குபுரிவித்துத் தன் நகரடைந்து வாழ்ந்து முடிவிற் சிவகதியுற்றான்.

உ - வது கொடுமுடிப்ராகாரம் :—இஃது அசுவமே தப்பிரதக்ஷிணத்திற்கு உள்ளேயுள்ளது. பரமசிவன் கட் டளைப்படி வரகுண பாண்டியராற் கட்டுவிக்கப்பட்டது. இதனைப் பிரதக்ஷிணஞ்செய்தல் கைலாசகிரியைப் பிர தக்ஷிணஞ்செய்தலை ஒக்கும். தேவகணத்தினர் யாவரும் தினந்தோறும் இதைச்சூழ்ந்து வருவார்கள். இதனைப் பிர தக்ஷிணஞ்செய்வோர்க்குப்பிணி, தரித்திரம், பாவங்கள் முதலியன நீங்கும்; ஆரோக்கியம், செல்வம், புண்ணியங் கள் முதலியன ஓங்கும். ஞானம் வளரும்; அஞ்ஞானம் தளரும். புகழ்கூடும்; இகழ் ஓடும்.

ந - வது ப்ரணவப்ராகாரம். இது கொடுமுடிப்ரா காரத்திற்கு உள்ளே உள்ளது. இது பிரணவப்ராகார மென்பதற்கு அடையாளமாக இப்பொழுதும் நாதோத் பத்தி வழங்கிவருகின்றது.

நாரதமுனிவர் வழிபட்டது

நாரத மஹாமுனிவர் ஒருகாலத்தில் சத்தியலோ கத்தை யடைந்து பிரமதேவரை வணங்கி, "ஸ்வாமீ! உலகத்திலே சிவஸ்தலங்கள் எவ்வளவு உள்ளன? அவற் றுள் சிறந்தன எவை? அருளல்வேண்டும்" என்று

பிரார்த்திக்கவே பிரமதேவர் மகிழ்வுற்று, “அநேககோடி ஜன்மங்களிலே செய்த பெரும்புண்ணியத்தாலேயே கிருபாசமுத்திரமாகிய பரமசிவனது மகிமைகளைக்கேட்பதற்கு ஒருவருடைய மனம் விரும்பாநிற்கும்; ஆதலால், நீர் பெரும் புண்ணியமுடையீர்; சொல்லுதலால் யானும் பெரும் புண்ணியமுடையேன்” என்று பின்வருமாறு சொல்லுகின்றார்:—

“முனிபுங்கவ! பூமியினிடத்து அளவில்லாத சிவஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள்ளே ஏழாயிரத்து நானூறும், அவற்றுள் ஆயிரத்தெட்டும், அவற்றுள் நூறும், அவற்றுள் அறுபத்தெட்டும், அவற்றுள் இருபத்து நான்கும், அவற்றுள் எட்டும் சிறந்தனவாம். அவ்வெட்டு ஸ்தலங்களாவன:—திருக்கைலாசம், ஸ்ரீ அருணசலம், ஸ்ரீ காசி, திருக்காளத்தி, திருவாலவாய், ஸ்ரீ சிதம்பரம், திருவாரூர், திருவிடைமருதூர். அந்த எட்டனுள் திருவிடைமருதூர் ஆதிசக்தியின் ஹிருதயகமலமத்தியமாய் விளங்கா நிற்கும். அனாதியாகிய அந்தஸ்தலத்தை உமாதேவியாருக்குக் காண்பித்தற்பொருட்டு மகாதேவர் திருக்கைலாயத்தினின்றும் முன்னொருகாலத்தில் எழுந்தருளினர். அவர் வருமுன்னமே அந்தக் கைலையங்கிரி அந்த ஸ்தலத்தில் மருதவிருக்ஷமாகி நின்றது. அந்த விருக்ஷத்தைத் தரிசித்தாற்கைலாசத்தைத்தரிசித்தபலன் உண்டாகும். அதனை வலஞ்செய்தாலும், பணிந்தாலும், பூசித்தாலும் கைலைக்குச்செய்தல்போலாம். அந்த மத்தியார்ச்சுனத்திற்பிறந்தாலும், இறந்தாலும், க்ஷணப்பொழுது தங்கினாலும், அதன் மகிமைகளைப் படித்தாலும், அதைத் தரிசித்தாலும், நினைத்தாலும் ஒருவன் எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கிச் சிவசாயுஜ்யத்தை அடைவான். அன்றியும் யஜமானன், பிதா, மாதா, குரு இவர்களுக்குச்செய்த அபராதங்களும் அந்த ஸ்தலத்தையடைதலால் நீங்கும். முன்னம், வரகுணபாண்டியரையும் ஹம்ஸத்துவசச்சோழனையும் வேறோர் அரசனையும்பற்றி மிகவும் வருத்திய கொடிய

பிரமஹத்திகள் அந்த ஸ்தலவிசேஷத்தால் நீங்கின. அதில் உள்ள புண்ணிய தீர்த்தங்களுக்கு அளவில்லை. அவற்றிற் செய்த அணுஅளவு புண்ணியமும் மேரு அளவாகவளரும். முற்காலத்தில் விபண்டகமுனிவர் பலமுனிவர்களோடும் இருபத்துநான்கு சதுர்யுகம் அந்தஸ்தலத்தில் தவஞ் செய்து சிவசாயுஜ்யத்தையடைந்தனர். பின்பு நானும் அந்த ஸ்தலத்தையடைந்து ஸ்ரீ மஹாலிங்கமூர்த்தியைப் பூசித்துப் பங்குனித்திருவிழாவும் நடத்தினேன். என்னைப் போன்ற அநேக பிர்ம்மாக்களும், அவர்களைப்பெற்ற அநேக அச்சுதர்களும் அந்த ஸ்தலத்தையடைந்து பசுபதியைத்தரிசித்துத் தத்தமக்கு வேண்டிய பயன்களைப் பெற்றார்கள். இன்னும் அந்த ஸ்தலத்தில், அசுவமேதப் பிரதக்ஷிணமென்று ஒன்றுண்டு. அதில் பிரதக்ஷிணஞ் செய்தால் குருடன் கண்பெறுவன். வறியன் செல்வமடைவன். குஷ்டம் க்ஷயம் முதலிய நோய்களெல்லாம் நீங்கும். பைசாசங்களெல்லாம் ஏங்கும். அந்தப் பிரதக்ஷிணஞ்செய்து பேறுபெற்றோர் பலர். அதன் பெருமையை அநேகம் நாவுடையோர் ஒருவாறு சொல்லலாமேயன்றி நான் சொல்லுதற்கு உரியேனோ? அங்கெழுந்தருளிய ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியின் திரவியங்களுள் அணுவளவேனும் ஒருவன் அபகரிப்பானாயின், அவன் எல்லாநரகத் துன்பங்களையும் அடைந்து பின்பு நூறு சண்டாளஜன்மமெடுத்து அதன்பின்பு நூறு நாய்ப்பிறப்புற்று அப்பால் புழுவாய்ப் பிறப்பான். இது நிச்சயம், நிச்சயம். இதற்கு ஒருகதை சொல்வேன் :—

"சம்பகாவதியென்னும் பெயரையுடைய ஒரு நகரத்திலுள்ள அதிசீலனாகிய விநதனென்னும் வேதியனொருவனுக்குப் பாபத்தால் தேவவிரதனென்று ஒருபுத்திரன் பிறந்தான். விநதன் உரியகாலங்களிலே அவனுக்கு ஜாதகன்மாதிகளை முறையேநடத்தி வேதாத்தியயனஞ்செய்வித்து வருகையில் ஒருநாள் தான் சொல்லியதைப் புத்திரன் உட்கொள்ளாமையால் அவனைக் கோபித்தான்;

உடனே தேவவிரதன் தகப்பனைப் புடைபெயர்ரவண்ணம் தூணோடுசேர்த்து இறுகக்கட்டிவிட்டு, அவ்வூரைவிட்டுப் புறப்பட்டுப் பல கீழ்மக்களோடுங்கூடிப் பல இடங்களிற் களவுசெய்து பின்பு திருவிடைமருதூரையடைந்தான். அடைந்ததினம் திருவிழாக்கால மாதலால், ஸ்ரீ ஏகநாயகப் பெருமான் உமாதேவியோடு எல்லா ஆபரணங்களு மணிந்து திருவீதியி லெழுந்தருளினர். அப்பொழுது யாரும் தரிசனம் செய்து கண்படைத்த பயனை அடைந்தார்கள். அந்தத் தேவவிரதன் சுவாமியினுடைய திருமேனியிலும், அம்பிகையின் திருமேனியிலும் உள்ள திருவாபரணங்களை யெல்லாம் நோக்கி, 'இவைகள் கிடைத்தால் எவ்வளவோ செய்துகொள்ளலாம்; இவற்றைமட்டும் அபகரிப்பது விசேஷமன்று; இன்னும் சேமத்திலுள்ள ஆபரணங்களை யெல்லாங் கவர்ந்தால் எவ்வளவோ நன்மை யடையலாம்; இவற்றைக் கவர்வதற்கு இவ்வாலய விசாரணையை எப்படியாவது பெறவேண்டும்' என்று தன்னைச் சூழ்ந்துநின்ற திருடர்களுக்கும் தூர்த்தர்களுக்குங்கூறி அதிகாரம் பெறுதற்பொருட்டு அரசனையடைந்து அவனை மகிழ்வித்து, 'இந்தக்கோயில் விசாரணைசெய்வதற்கு எனக்கு அதிகாரங்கொடுத்தால் மிகவும் செவ்வையாக நடத்துவேன்' என்றுகூறி, அதிகாரம்பெற்றான். அந்த ஸ்தலத்துத் திருவீதியிலுள்ள மனையொன்றிலே தங்கியிருந்து எல்லா ஆபரணங்களையும் ஒருங்கே கவர்ந்து போவதற்குச் சமயம்பார்த்துக்கொண்டே அதிகாரஞ் செய்து வரும்நாளில்,அவனுக்குவலப்புறத்தில் ஒருபிளவை யுண்டாயிற்று. அதில் ஈமொய்யாதபடி ஆலயத்துள்ளே ஒரு திருவிளக்கிலிருந்த நெய்யில் ஒரு துளியையெடுத்து, அப்பிளவையின்மீது தடவித் தன்மனைக்குச் செல்லுகையில் ஒரு பாம்புகடிக்க அவன் இறந்தான். அக்கொடிய பாவியை யமகிங்கரர் பிடித்துக்கட்டிக் கொண்டுபோய், இருபத்தெட்டுக்கோடி நரகிலும் வீழ்த்தி, வெகுகாலம் வருத்தியபின்பு அவன் நூறு சண்டாள ஜன்மத்தை

யடைந்து, பின்பு நாய்ச்சன்மம் நூறடைந்து, பின்பு அந்தத் திருவிடைமருதூரில் மலப்புழுவாய் ஜனித்துக்கிடந்தனன். அக்காலம் பூசவிழாவாதலாற் பூசத்துறையில் ஸ்நானம் பண்ணின ஒரு பிராமணன் கூட்டத்திற்செல்ல முடியாமல் ஒதுங்கியபொழுது அவன்பாதம் புழுவின்மேற்பட்டது. படவே அப்பாதம் பூசதீர்த்த ஸம்பந்தமுள்ளதாதலால், அவன் அப் புழுவடிவம் ஒழிந்து தேவர் உருவம் பெற்று,அரம்பையரிருபுறத்தும் சாமரைவீச, விமானமேறி வானுலகடைந்து அளவற்ற இன்புற்று வீற்றிருந்தான்.

"ஆதலால், சிவத்துரோகம் பொல்லாது! பொல்லாது!!" என்று கூறக்கேட்டு நாரதமுனிவர், "ஸ்வாமீ! அந்த ஸ்தலத்தை யடையும் முறையையும், அடைந்து அங்கே செய்வனவற்றையும், ஆங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் பண்ணுங் கிரமத்தையுங் கூறியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்; பிரமதேவர் அவற்றை முறையே கூறக் கேட்டு விடைபெற்று இந்தஸ்தலத்தை யடைந்து விதிப்படி எல்லாத் தீர்த்தங்களிலும் ஸ்நானம்பண்ணிச் சுவாமி தரிசனஞ்செய்து பூசவிழாவுந் தரிசித்துப் பேராத பேரானந்தமுற்றனர்.

இந்த மஹாசரித்திரத்தைக் கேட்ட சவுனகாதிமுனிவர்கள் சூத முனிவரோடும் இந்தஸ்தலத்தை யடைந்து ஸ்ரீ மஹாலிங்கமூர்த்தியையும், ஸ்ரீ பிருகத்சுந்தரகுசாம்பிகையையும் வழிபட்டுப் பெரும்பேறு பெற்றனர்.

(எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

போற்றலுறு மருதவனப் புராண மென்னப் புகலிதனைப் படிப்பவர்கள் கேட்போர் யாரும், மாற்றரிய வினையினொடு பகையை வென்று மன்னுநெடுஞ் செல்வமொடு மகவு மெய்தித், தேற்றமுறு புவியினிடை நீடு வாழ்ந்து திகழுறுவிண் ணுலகில்வள ரின்பந் துய்த்துச், சாற்றலுறு பரஞான மருவி யீசன் சரணபங் கயநிழல்வீற் றிருப்பர் மன்னோ.

மத்தியார்ச்சுனமான்மியம் முற்றுப்பெற்றது.

வஸந்தோத்ஸவத்

திருக்கல்யாணவரலாறு

ஸ்ரீ அகஸ்தியமுனிவர், இந்த க்ஷேத்திரத்தில் முன்னம் காசிபர் முதலிய முனிவர்களுக்குச் சிவதத்துவத்தை உபதேசித்து, அவர்களோடு அம்பிகையைக் குறித்துத் தவஞ்செய்து அருள்பெற்று, அந்த அம்பிகையோடும் முனிவர்களோடும் சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்துகொண்டிருக்கையில், சிவபிரான் ஏகநாயகமூர்த்தியாய் அவர்களுக்குக் காட்சி கொடுத்து, "உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருள முனிவர்கள் யாவரும் தத்தமக்கு வேண்டியவாறே வரங்களைப்பெற்று உய்ந்தார்கள். அகஸ்திய முனிவர், "ஸ்வாமீ! தேவரீரைப்பிரியாது விளங்கும் உமாதேவியார், பர்வதராசனுடைய வேண்டுகோளின்படி அவனுக்குப் புத்திரியாக அவதரித்துத் தவஞ்செய்தபொழுது காட்சிகொடுத்து, அவ்வுமாதேவியாரைத் திருக்கல்யாணஞ்செய்து, ஸ்ரீஸ்கந்த தேவரைப் பெற்று, அவரால் ஹரிப்பிரம்மாதி தேவர்களுக்கு நேரிட்டிருந்த துன்பங்களை மாற்றிப்பாதுகாத்தருளினீர். அவ்வாறேஇந்த ஸ்தலத்திலும் தேவரீருடைய ஆக்ஞையினாலே பிரிந்து தவம்புரிந்து காட்சிபெற்ற உமாதேவியாரைத் திருமணஞ் செய்து காட்சியளித்து அடியேங்களைக்காத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அப்படியே வைசாக மாசத்தில் உத்தர நக்ஷத்திரத்தில் அம்பிகையைத் திருக்கல்யாணஞ்செய்து அகஸ்தியமுனிவருக்கும் மற்ற முனிவர்களுக்கும் காட்சி கொடுத்தருளினார்.

பின்பு சூரியகுலத்தரசனாகிய மாந்தாதா என்பவன் பெரியோர்கள் சொல்லவறிந்து, வஸந்தோத்ஸவத்தின் ஆறாந்திருநாள் உத்தர நக்ஷத்திரத்தில் இந்தத் திருக்கல்யாணத்தை விதிப்படி புரிவித்துப் பெரும்பேறு பெற்றான்.

இந்தத் திருக்கல்யாண மகோத்ஸவத்தை வேதாகம விதிப்படி பிரபலமாய் நடத்தவேண்டுமென்று வேதவித்துக்களாகிய அந்தணர்களும், ஆகமநிபுணர்களாகிய ஆதிசைவர்களும் விரும்பியபடி திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து 16-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ **சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்** கட்டளைப் பிரகாரம், காசிவாசியும், ஷை யாதீனத்துக் காறுபாறுமாகிய **சுப்பிரமணிய சுவாமிக**ளால் சிவநேசமுள்ள சில கனவான்களுடைய உதவியைக் கொண்டு, கலியப்தம் ௫௲௮௱-ல் நிகழ்ந்த தாரணஷு முதல் வஸந்தோத்ஸவத்தின் ஐந்தாம் திருநாள் அம்பிகை தவமும், ஆறாந்திருநாள் உத்தர நக்ஷத்திரத்தில் திருக்கல்யாணமும், ஒன்பதாந் திருநாள் வரையினதாகிய மூன்றுநாளும் ஔபாஸனாதி கிரியைகளும், பத்தாந் திருநாள் விசாகத்தில் ஔதும்பரபூசை முதலியனவும் தீர்த்தமும், அன்றிரவில் வெள்ளி ரதக் காட்சியும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

* * * *

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

பூமேவு மனுகுலத்து மாந்தாதா வெனுங்குரிசில்
 புரைய விந்நாள்
தூமேவு மிடைமருத வாணருக்குத் திருமணத்தைச்
 சுருதி யோடு
பாமேவு மாகமஞ்சொல் விதிப்படியே புரிவித்துப்
 பயன்பெற் றுய்ந்த
மாமேவு துறைசையிற்சுப் பிரமணிய முனிவர்பிரான்
 வாழ்க மன்னோ.

மத்தியில் சில வருஷங்கள் இந்த மகோத்ஸவம் நடைபெறாமல் நின்றிருந்தது. ஸ்ரீ மகாலிங்கமூர்த்தியினிடத்து விசேஷ ஈடுபாடுள்ளவர்களும் திருவாவடுதுறையாதீனத்தில் 20-ஆம் பட்டத்தில் இப்போது எழுந்தருளியிருப்பவர்களுமான **ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள்** 1938-ஆம் ஆண்டு முதல் முன்னிலும் மிக்க சிறப்புடன் இவ்விழாவை நடப்பித்துப் பக்தகோடிகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை யளித்து வருகிறார்கள்.

ஸ்ரீ ஏகநாயகரூசல்

சீர்பூத்த நான்மறையா கமங்கள் வாழத்
திருநந்தி கணங்களென்றுஞ் செழித்து வாழத்
தார்பூத்த சித்தாந்த சைவம் வாழத்
தமிழ்மறையு மைந்தெழுத்துந் தழைந்து வாழப்
பேர்பூத்த மறையவரோ டடியார் வாழப்
பெரும்பொன்னித் திருநாடு பிறங்கி வாழ
ஆர்பூத்த விடைமருதங் கோயி லாக்கொண்
டமரேக நாயகரே யாடி ரூசல். (க)

மாமேவு புகழ்வீர சோழ னுற்று
மணிமதில்சூழ் திருக்கோயி லிடையின் மேவும்
தூமேவு மலங்கார மண்ட பத்திற்
றுலங்குமணிப் பொன்னூச லிலங்க மேவிப்
பூமேவு பெருநலமா முலையா ளோடும்
பொன்னனைய மேனியினீ ராடி ரூசல்
தேமேவு மருட்கடலே யாடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல். (உ)

தளம்பூத்த நறுங்கொன்றைத் தாம மாடத்
தடந்திரைமந் தாகினியாந் தைய லாடக்
குளம்பூத்த விழியாடக் குழைக ளாடக்
குலவுமணிப் பூம்பணிகள் குலவி யாட
வளம்பூத்த பல்லுயிரும் வருந்தா தீன்று
வளர்த்தருளுந் தாய்மருங்கின் மகிழ்வுற் றூட
உளம்பூத்த விடைமருத ராடி ரூசல்
உவந்தேக நாயகரே யாடி ரூசல். (ங)

இந்திரனுஞ் சசியுமொரு வடந்தொட் டாட்ட
இந்திரையு முகுந்தனுமோர் வடந்தொட் டாட்டச்
சந்திரனேர் தவளசரோ ருகத்து மேய
தையலுநான் முகனுமொரு வடந்தொட் டாட்ட
அந்தரநாட் டவர்களொடு மரம்பை மாரும்
அகமகிழ்ந்து போற்றியொரு வடந்தொட் டாட்ட
மந்திரமா விடைமருதங் கொண்டு வாழும்
மகாலிங்க நாயகரே யாடி ரூசல். (௪)

ஒருஞானப் பாலருந்தி யம்பொற் றாளம்
ஒண்டரளச் சிவிகைபந்த ருவந்து பெற்றோர்
தருஞானத் தைப்பூசங் காண்பா யென்று
தவளவென்பைப்பெண் ணாக்கித் தந்த வெங்கோன்
திருஞான சம்பந்தச் செல்வ ரோதுஞ்
செந்தமிழ்மா மறையன்பர் தெரிந்து பாட
அருஞானத் திருவுருவி ராடி ரூசல்
அருண்மருத வாணரே யாடி ரூசல். (௫)

புடைமருதப் பெருந்துறையி லருள்பெற் றென்றும்
பூசையறு காலத்தும் வழாம லாற்றி
இடைமருதா நந்தத்தே னென்றே யன்பின்
ஏத்துபிரா னருளூச லடியார் பாட
அடைமருதக் கிளிமொழியோ டாடி ரூசல்
அனைத்துயிரும் புரந்தருள்வீ ராடி ரூசல்
இடைமருத நாயகரே யாடி ரூசல்
ஏகநா யகப்பெருமா னாடி ரூசல். (௬)

அரசரெலா மடிவணங்க மதுரை காத்த
அண்ணல்வர குணதேவற் கச்ச நீங்க
விரசுபழி யோட்டியர லோகங் காட்டு
மேன்மைதனை மெய்யன்பர் வியந்து பாடப்
பிரசமலர்த் தொடையசைய வாடி ரூசல்
பிறையணிந்த செஞ்சடையீ ராடி ரூசல்

இரசதவெண் கிரியுடையீ ராடி ரூசல்
இடைமருத வாணரே யாடி ரூசல். (எ)

தேனாடு நறுங்கொன்றைத் தொடைய லாடத்
தெளிபுனற்கங் காநதியின் றிரைக ளாட
மானாடத் திருக்கரத்து மழுவு மாட
மாரனிளந் தென்றலந்தேர் மருவி யாட
வானாட மண்ணாட வனைத்து மின்ப
வாரிபடிந் தாடவுமை மருங்கின் மேவித்
தானாடத் தருமமெலாந் தழைவுற் றோடத்
தயங்குமிடை மருதரே யாடி ரூசல். (அ)

வரையரையன் மேனையொடு மகிழ்ந்து காண
வரைந்தாடுந் திருவூச லாட்டுங் கூடல்
அரையன்மலை யத்துவசன் மனைவி காண
அன்றாடுந் திருவூச லாட்டுங் காணப்
புரையுடையேங் கண்டுய்ய வாடி ரூசல்
புண்ணியவெள் விடையுடையீ ராடி ரூசல்
தரைசெய்தவப் பயனாய மருத நீழல்
தங்கியருள் செல்வரே யாடி ரூசல். (கூ)

பொருவிடைவா கனமுடையீ ராடி ரூசல்
பொங்கரவப் பூணுடையீ ராடி ரூசல்
கருவிடையாம் புகுந்தூச லாடா வண்ணங்
காத்தருளும் பெருமானே யாடி ரூசல்
வருவிடையர் குலந்தழைப்ப வருமா னுயர்
வடித்தவிசை கொளுஞ்செவியீ ராடி ரூசல்
திருவிடைமா மருதுடையீ ராடி ரூசல்
தேவாதி தேவரே யாடி ரூசல். (க0)

உ

ஸ்ரீ ஏகநாயகர் தாலாட்டு

சீர்மலிந்த கல்வியொடு செல்வமுமேன் மேல்வயங்கி
ஏர்மலிந்த மாட விடைமருத நாயகரோ. (௧)

எல்லாத் தலத்து மிடைமருதே மேலாமென்
றெல்லா மளித்தாட் கியம்பியருண் மாமணியோ. (௨)

வாய்ந்த கயிலை வடிவா மருதநிழல்
ஏய்ந்த வுமையோ டெழுந்தருளி வாழரசோ. (௩)

மாகா ரிருளினிடை வந்தே யுருத்திரர்கள்
ஏகா தசரு மிறைஞ்சவெளிப் பட்டவரோ. (௪)

மாதுமையாள்பன்னாட்செய்மாதவங்கண் டன்னாண்முன்
சோதிமகா லிங்கமாய்த் தோன்றியருள் சின்மயரோ. (௫)

கோனேயென் பார்தெளிந்து கொண்டாடு மாறுதன்னைத்
தானே யருச்சித்த தண்கருணை வாரிதியோ. (௬)

காக மொருதடத்தின் கட்படிய மற்றதன்றன்
ஆகம் பசும்பொன்னா வாக்கியரு ளாரமுதோ. (௭)

பணவரவம் பூணும் பரனேயென் றாண்ட
கணபதிபூ சிக்கக் கவினு முதற்பொருளோ. (௮)

மாட்சி யுரோமசன்றன் மாதவங்கண் டன்னையொடு
காட்சிகொடுத் தன்னான் கவலை கடிந்தவரோ. (௯)

இலங்கு குறுமுனிவ னென்றுவரு மென்று
நலங்கொ ளவன்வரவை நாடியுறை நாயகமோ. (௧௦)

மண்ணைக்கொ டேலென்று மாவலிக்குச் சொற்றவன்றன்
கண்ணைக் கொடுத்தவனைக் காத்தருளுங் கற்பகமோ. (கக)

இன்பகற்று பாவத் திடைப்பட்டோர் மூழ்கினவர்
துன்பகற்று பூசத் துறையாடுஞ் சுந்தரமோ. (கஉ)

சீமான் வரகுணப்பேர்த் தென்னவன்றன் காதலியைக்
கோமானீ கொள்ளெனவே கொண்டகுணக் குன்றமோ.

அல்லார் களத்தா யருளென்பார் காதலித்த
எல்லா மருளு மிடைமருத மார்கரும்போ. (கச)

தேனே சுவையமுதோ தித்திக்குஞ் செய்யகனி
தானே மலைபயந்த தையலா ளாருயிரோ. (கரு)

பிரமகத்தி முன்னும் பெரும்பாவ நீக்கி
வரமளித்து மன்னுயிரை வாழச்செய் மாமணியோ. (கசு).

பிணிக்கோதில் பூம்புகார்ப் பிள்ளையார் சொன்மும்
மணிக்கோவை கொண்டு மனமகிழ்ந்த வள்ளலோ. (கஎ)

வயமேவச் சூழ்வோர்கள் வைக்குமடி யொன்றற்
கயமேதப் பேறருளு மாரருட்சிந் தாமணியோ. (கஅ)

தெய்வமில்லை யென்னுஞ் சிதடர்கடீ வாய்மூடச்
செய்வரத னாகியநந் தெய்வ சிகாமணியோ. (கசு)

நீதஞ்ச மென்றவர்க்கா நீடுகமலைத்தெருவிற்
பாதஞ் சிவக்கப் பரவைமனை சென்றவரோ. (உ0)

விண்ணவரும் பாதலத்தின் மேயவரு மெண்டிசையின்
கண்ணவரு நந்தவத்தைக் காதலிக்க வந்தவரோ. (உக)

காவணங் காட்டுங் கடிமனையிற் சுந்தரரை
ஆவணங் காட்டி யடிமைகொண்ட வந்தணரோ. (உஉ)

திருந்தடியைப் போற்றிசெயுஞ் செல்வரைமுன் கோலக்
குருந்தடியி லாண்ட குரவர் சிகாமணியோ. (உங)

நந்தா வுலக நடுங்கா வணஞ்சடையில்
மந்தா கினியை மணந்தமண வாளரோ. (உ௪)

மன்னுயிர்கள் யாவும் வயங்குவநா மென்பதைமுன்
தென்னன் பிரம்படியாற்றேற்றுவித்த மெய்ப்பொருளோ.

கானந் தனில்விசயன் காண்டீபத் தாலடியுண்
டீனந் தவிர்படையொன் றீந்தருளு மெம்மானோ. (உ௬)

துங்கத் தமிழ்மொழியின் றூய்மையெவ ரும்மறியச்
சங்கப் புலவரிடைத் தங்கியரு ளுவலரோ. (உ௭)

செயிரா வணவனைத்துந் தீர்த்தருளும் பொன்னி
அயிரா வணத்துறையி லாடியரு ளங்கணரோ. (உ௮)

ஆரா வமுதோ வருட்கடலோ வெம்முடைய
தீராத துன்பமெலாந் தீர்க்குஞ் சிவக்கொழுந்தோ. (உ௯)

கருது மடியார் கவலையெலாம் போக்கி
மருத நிழலினிடை வாழ்ந்தருளு மாமணியோ. (௩0)

இந்நூலாசிரியர் எழுதியுள்ள
வேறு வசன நூல்கள்

		ரூ. அ.
1.	புத்த சரித்திரம், பௌத்த தர்மம், பௌத்த சங்கம்	0—12
	ஷை காலிகோ கட்டிடம்	1—0
2.	மணிமேகலைக் கதைச் சுருக்கம்	0—10
3.	உதயணன் சரித்திரச் சுருக்கம்	1—0
	ஷை காலிகோ கட்டிடம்	1—4
4.	மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் I	2—0
5.	ஷை II	2—0
	4-ம், 5-ம் சேர்ந்தது காலிகோ கட்டிடம்	4—8
6.	வித்துவான் தியாகராச செட்டியார் சரித்திரம்	1—8
7.	நான் கண்டதும் கேட்டதும்	0—6
8.	புதியதும் பழையதும்	0—12
	7-ம், 8-ம் சேர்ந்தது காலிகோ கட்டிடம்	1—4
9.	நல்லுரைக்கோவை I	1—0
10.	ஷை II	1—0
	9-ம், 10-ம் சேர்ந்தது காலிகோ கட்டிடம்	2—4
11.	நல்லுரைக்கோவை III	1—0
12.	ஷை IV	1—0
	11-ம், 12-ம் சேர்ந்தது காலிகோ கட்டிடம்	2—4
13.	திருவள்ளுவரும் திருக்குறளும்	0—3
14.	நினைவு மஞ்சரி I	1—0
15.	ஷை II	1—4

சங்கீத மும்மணிகள்

16.	கனம் கிருஷ்ணையர்	0—8
17.	கோபாலகிருஷ்ண பாரதியார்	0—8
18.	மகா வைத்தியநாதையர்	0—6
	16, 17, 18 சேர்ந்தது காலிகோ கட்டிடம்	1—10

கிடைக்குமிடம்: **'தியாகராஜ விலாசம்'**
67, பிள்ளையார் கோவில் தெரு,
திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை.